திராவிடநாடு

8—3—59 | வார வெளியீடு | விலை 16 காசு



முகப்பில்......

விடுதலை பெற்ற நாடுகள், உருவான தலைவர்களில்லாவிடில், சுயநலக் காடுகளாகும் என்பதை இன்றைய சரிதம், உலகுக்கு உணர்த்தி வருகிறது.

விடுதலைக்காகப் பாடுபட்டோர், பட்டபலன் கனியும்போது, சுதந்திரப் போராட்ட காலத்தைவிட அதிகமான அளவுக்கு, தியாக உள்ளம் பெறவேண்டும்.

விடுதலை பெற்றது, நாம் ஆளத்தான்; நாம் 'ராஜா'வாக இருக்கத்தான்; அதற்கான நானாவித தந்திரங்களையும் செய்தாவது, பிடித்த இடத்தை இழக்காமல் தற்காத்துக்கொள்ளவேண்டும் என்கிற 'சுயநலம்' தலைக்கு ஏறும்போது, மக்கள் தலைவன் வேங்கையாகி விடுகிறான். கையில் கிடைத்த அதிகாரத்தைக்கொண்டு, தனது சொந்தக்காரர்களையும், நண்பர்களையும் 'மேன்மைப்படுத்த' முனைந்து, வீழ்ச்சிப் பாதைக்கு வழியமைக்கத் துவங்குகிறான்.

விடுதலை பெற்ற, இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் வாழ்வில், மாபெருந் தலைவர்களாக விளங்கியவர்களைப்பற்றி, கிளம்பிடும் குற்றச்சாட்டுகள், பலப்பல. தங்கள் 'பரம்பரையே' ஆளவேண்டுமென ஆசைப்படுகிறார்கள், தங்களுக்கு வேண்டியவர்களுக்கே பட்டம் பதவிகளைக் கொடுக்கிறார்கள், இலஞ்சம் ஊழல்கள் மலிகின்றன, என்று நாள்தோறும் கூறப்படுகிறது.

பாடிஸ்டா! இப்பெயர், சின்னஞ்சிறு தீவான க்யூபாவில், கொண்டாடப்பட்ட காலம் உண்டு. ஸ்பானிய ஆதிக்கத்தின் கீழ் கிடந்த, அத்தீவின் அரைக்கோடி மக்களுக்கும், விடுதலை பெற்றுத்தந்த, தலைவனாக விளங்கினான். அரசபீடத்தில் நேராகவே அமராது, பலரை அமர்த்தியும் இறக்கியும் 'காமராஜரிசம்' செய்தான்! ஆண்டுக்கொரு அரசுத்தலைவரை ஆக்குவதும், இறக்குவதுமாக இருந்தான்! கடைசியில், "என் இத்தொல்லை? நானேயிருக்கிறேன்!!" என்று, அரசுத் தலைவராக அமர்ந்தான். க்யூபா, 'நமது தலைவர்' வருகிறாரே, நலம்பல செய்வார், தூசுகளைத் துடைப்பார்என்று நாடுநம்பிற்று. ஆனால்! தூசுகள், பெருகின. சமுகத்தின் நோய்கள், விரிந்தன. திருட்டும், கொலையும், விபசாரமும் அதிகமாயின. ஆளுந்தலைவரான பாடிஸ்டாவின் சொந்தமைத்துனனே, பல, விபசாரக்கூடங்களை வைத்து நடத்தினானும். பாடிஸ்டாவுக்கு வேண்டியவர்கள் எல்லாம், தத்தம் இஷ்டப்படி, இலாபவேட்டைகளில் இறங்கினர். இதையெல்லாம்விட ஆச்சரியம், இவர்களெல்லாம் சம்பாதிக்கும் பணத்தில், தலைவன் பாடிஸ்டாவுக்கும் 'பங்கு' உண்டாம்! தேர்தல் நிதி, அது இது என்று எத்தனையோ வழிகளில் 'பங்கு' செலுத்தப்படுமல்லவா!!

"உழைக்கமுடியும்; உழைப்பேன் என்றும் சொல்கிறான். ஆனால், உழைக்க வழியில்லாத காரணத்தால், பிழைப்பதற்காகத் திருடப்போகிறான்! அவனுக்கு வழிசெய்து கொடுக்காத அரசு அவனைச் சிறையில் தள்ளிவிட்டால் போதுமா!"

சமுகத்தின் இக்கொடுமையை, எதிரொலித்துக் கிளம்பிற்று ஒரு குரல்! **பெடல்காஸ்ட்ரோ** எனும் இளவக்கீல் (முகப்பிலிருக்கும்படம்)நாட்டின் கேடுகண்டுபாடிஸ்டா ஆட்சி ஒழிந்தாலொழிய நாடு நலன் பெறாது, எனக் கிளம்பினான். வாலிபர் குழாம், சேர்ந்தது. பாட்டாளிகள் பக்கமும், ஏழை விவசாயிகளிடையிலும் எழுச்சி அரும்பிற்று "ஜுலை-26" என்று தங்கள் இயக்கத்துக்குப் பெயர் வைத்துக்கொண்டு, க்யூபாவின், அரசியல் வாழ்வில் புது மலர்ச்சி உண்டுபண்ணக் கிளம்பினர். நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள் எனத் தங்களைக் காட்டிக்கொள்ள அவர்கள் தாடி மீசைகளை எடுப்பதில்லையாம் ஆடை விஷயங்களில்கூட அக்கறை காட்டுவதில்லையாம். மீசை அரும்பிய வாலிபர்கள்!—இன்று க்யூபாவின் 'தலைவிதி'யை எழுதும கட்டத்திலிருக்கின்றனர். இயக்கம் வளர்ந்து, இன்று பாடிஸ்டா, வெளியிடம் தேடி ஒளியவேண்டி ஏற்பட்டுவிட்டது! க்யூபாவின் பிரதமர். இப்போது இந்த காஸ்ட்ரோதான். 33-வயது நிரம்பிய இந்த இளைஞன் கையில், க்யூபாவின், நிரந்தர விடுதலையும், நிலையான வாழ்வும் அடங்கிக்கிடக்கிறது.

சுமார் 200-பேருடன், காஸ்ரோவின் இயக்கம் ஆரம்பமாயிற்று. இன்று, சுயநலத் தலைவனை விரட்டிவிட்டு, அந்த இடத்தில் அமருவார்கள் என்று கனவும் கண்டதில்லை, பலர்! வளரத் துவங்கியபோது, பாடிஸ்டா அடக்குமுறைகள்மூலம் அடக்கிட முனைந்தான். ஆதிக்கவாதிகளெல்லாம் சுதந்திரவேட்கைக்கு இப்படித்தானே எரு ஊட்டுகின்றனர்!! காஸ்ரோவின் அண்ணன் தம்பிகள் கூட இந்த அடக்குமுறைக்குப் பலியாகினர். காஸ்டிரோவுக்குக்கூட, தேசத்துரோகி என்று பட்டம் சூட்டப்பட்டு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது! ஆனால், ஏழு மாதங்களுக்கெல்லாம் அதே அரசு, விடுதலை செய்ய நேர்ந்தது!!

புதுஒளி பூக்கும் என்கிற நம்பிக்கையுடன், அமெரிக்காவுக்கருகில் இருக்கும் இந்தச் சின்னஞ்சிறு தீவில் மக்களிருக்கின்றனர். சர்க்கரையும் தேயிலையும்கொண்ட இந்நாட்டின் எதிர்காலம், இப்போது இந்த வாலிபப்படையின் கையில்தான் உள்ளது.

"சுற்றியிருக்கும் கடலோடு கடலாக எங்கள் பூமி, அமிழ்ந்தாலும் கவலையில்லை. இன்னொருத்தருக்கு மட்டும் அடிமையாக எங்கள் நாடு, கிடப்பதை ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை" என்று முழக்கம் எழுப்புகிறார், காஸ்டிரோ. இந்த முழக்கம்கொண்ட, எந்த விடுதலை இயக்கமும், தோற்றதாக வரலாறே இல்லையன்றோ?

★

செய்யாது டில்லி!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [8-3-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 34

நிதியமைச்சரின் இந்த ஆண்டு வரவு செலவுப் பேச்சிலே, நமது கவனத்தைக் கவர்ந்த இடம், தெற்கிலும் தொழில்வளரத் தனக்கிருக்கும் சிரத்தையைத் தெரிவித்திருக்கும் பகுதிதான்! இங்கும் தொழில் வளரவேண்டுமெனும் இன்றியமையாமையை அவர் ஏற்றுக்கொள்வதே, ஒரு பெரிய காரியமாகும்; ஏனெனில், வடக்கு வளர்கிறது எனும்போது, 'இல்லை யில்லை' என்பவர் அவர்!!

சிலசில விபரங்களைத் தந்து, செய்கிறோம், செய்ய முயற்சிக்கிறோம், அனுமதி பெறுகிறோம், என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். நமக்குப் பதில்தரவேண்டுமென்பதற்காகச் சொல்கிறாரா! உண்மையாகவே நடக்குமா!! — என்பது ஒருபுறமிருக்க, விரிவான தொழில்கள் வேண்டும் நிலையில் தென்னாடு உள்ளது என்பதை, மறுக்கும் நிலையிலில்லை அவர். "கருத்து மாறுபாடு இல்லை. விரிவான தொழில்கள் நமக்கு வேண்டும்" என்றும் விளக்கியிருக்கிறார். நன்றி, அமைச்சருக்கு!!

கைத்தறித் தொழில், நமது நானிலத்தைப் பொறுத்தவரையில், பெரிய தொழில்; ஆனால் செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கிற தொழில். அதன் மாட்டும் அமைச்சர், தனது அனுதாபத்தையும் ஆதரவையும் அள்ளிச் சொரிந்திருக்கிறார்..." நிரந்தரமாக கைத்தறித் தொழில் நன்கு நடைபெறுவதற்கான வழிகளை வகுப்பது அவசியம்" என்றும் வலியுறுத்தியிருக்கிறார். "...ஆலைத் தொழிலைவிட, கைத்தறித் தொழிலைத்தான், அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி அதிகம் பாதித்தது" என்பதனையும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். இரண்டாவது நன்றி அமைச்சருக்கு!!

இதுபோல, நாட்டில்வாழும் மனிதனின் தேவைகளை உணர்ந்து, அவனுக்கான வழிவகைகளைச் செய்துதரும் வகையில், 'நமது சர்க்கார்' இல்லையே என்பதுதான் நமது குறையாகும்! "சரி சரி. அந்தக் குறை, இந்தத் தொழில் விஷயத்தைப் பொறுத்தளவில் தீர்ந்துவிட்டது என்று இப்போதாவது ஒப்புக் கொள்கிறாயா? இனி, பேசாதே. என்னென்ன தொழில்கள் வேண்டும், எங்கெங்கே வைக்கலாம், அங்கங்கேயுள்ள வசதிகள் யாவை என்கிற விபரத்தைக் கொடு. அடிக்கடி விபரமும் திட்டமும் கேட்கிறாரல்லவோ, எமது மந்திரி! கொடு. கொடுத்துப்பார். செய்வார்." என்று செப்ப முன்வரக்கூடும், காங்கிரஸ்காரர்கள். திராவிடம், நம்மால்தான் எழில் சோலையாக வேண்டும் என்பதல்ல! யார் அதற்குக் காரணமானாலும், நமக்கு மகிழ்ச்சியே!!

திட்டமும் விபரமும் தந்தால், செய்திடும் அதிகாரம் சென்னைக்கு உண்டா எனும்போதுதான், வேதனை குடைகிறது நம்மை. விழியிருந்தும், இவர்கள், குருடர்களாக நடிக்கின்றனரே எனும் சோகம் மேலிடுகிறது.

பலதொழில் பரவவேண்டும் என்பதிலும், இருக்கின்ற பெருந்தொழிலான கைத்தறி பிழைக்கவேண்டும் என்பதிலும், அமைச்சர் ஆர்வம் காட்டுகிறார்! அதாவது, சென்னை காங்கிரஸ் சர்க்காருக்கும் ஆசையிருக்கிறது!! ஆர்வமும் ஆசையும் இருக்கும்போது, இரண்டையும் சாதிக்க, தடைபோடுவது யார்?— யார் கையைப்பிடித்துத் தடுக்கிறார்கள்? — எனும் போதுதான், பிரிவினைக் கீதம், ஒலிக்கிறது. "ஆரம்பித்து விட்டாயா? தட்டிக்கொடுத்தாய்! உடனே, டில்லி மீது பாய்கிறாயா? என்னப்பா செய்துவிட்டது டில்லி? டில்லி என்ன உங்கள் கையையா பிடித்துக் கொள்கிறது. எதெற்கெடுத்தாலும் டில்லி! டில்லி!! என்று சொல்லி, அதன் மீது பழியைப் போடுவதே உங்களுக்குப் பழக்கமாகிவிட்டது" என்று சீறக் கூடும் காங்கிரஸ் தோழர்கள்.

அரசியலில் இருக்கவேண்டுமென்பதற்காகவோ வேண்டுமென்றே அருவருப்பினாலோ அல்ல, நாம் டில்லியைக் காய்வது! எவ்வளவுதான், இங்குள்ளவர்கள்—அவர்கள் காங்கிரசானாலும், கழகமானாலும், கம்யூனிஸ்டானாலும் — விரும்பினாலும், டில்லி இணங்காவிடில் நடவாது. அமைச்சர், பலதொழில்கள் வேண்டுமெனலாம்; நடவாது, டில்லி மறுத்தால். கைத்தறியாளர், கண்ணீரைத் துடைக்கவேண்டுமெனக் காமராஜர் விழையலாம்; முடியாது, டில்லி மறுத்தால்.

"ஓகோ! எங்கே, அப்படி ஒரு உதாரணம் காட்டு?" எனலாம், காங்கிரஸ்காரர்கள்! அடுக்குச் சொல்லில், பேசி மக்களை மயக்கிவிட்டால் போதுமா எனலாம்!! அந்த ஆர்வமுள்ள, உண்மைக் காங்கிரசுக்காரர்களுக்கு இதோ ஒரு தகவலை, வைக்கிறோம். சட்டசபையில் நிதியமைச்சர் கைத்தறிக்கு நிரந்தர ஆதரவு தரவேண்டிய அவசியம்பற்றி முழக்கமிட்டாரே, அதற்குப் பிறகு மார்ச் 4-ந் தேதி டில்லியிலிருந்து வந்த சேதி இது.

> **"தறித்துணிக்கு ஆதரவுதருமுகத்தான் ஆலைத் துணி உற்பத்திக்கு ஒரு 'வரம்பு' நிர்ணயிக்க வேண்டும்."**

இது, சென்னை சர்க்காரின் ஏகோபித்த விருப்பம்! இதனைச் சர்க்காரே டில்லிக்கும் எழுதியது. புலியையும் உலவவிட்டு, புள்ளிமானையும் விட்டால் எது

சாகும் என்பதை, நமது அமைச்சர்கள் அறியாமலில்லை. அதனால்தான், டில்லிக்கு இந்த வேண்டுகோளை அனுப்பினர்கள். தனிப்பட்டவர்கள்கூட அல்ல, சர்க்காரே அனுப்பினர்கள். அதிலும் காங்கிரசின் முக்கியமானவர்களில் ஒருவரெனக் கருதப்படும் காமராஜரின் சர்க்கார் அனுப்பியது. தி. மு. க. வுக்கு பதில் தரவாவது எமக்கு அதிகப் பணமும் வசதியும் தருவீர் என்று நம்மைக்காட்டி, டில்லியிடம் உதவி கோரக்கூடிய சென்னை சர்க்கார் அனுப்பியது. கோரிக்கையின் அவசியத்தையும், அப்போதுதான் தறித்தொழிலுக்கு, 'நெருக்கடி' ஏற்படாமலிருக்கலாம் என்பதையும் உணர்ந்ததால்தான் அனுப்பியது. சமீபத்தில் ஏற்பட்ட, துணி நெருக்கடியின்போது, ஆலைத் துணியைவிடத் தறித் துணிதான் பாதிக்கப்பட்டது என்பதை அறிந்ததால் அனுப்பியது. இப்படிச் செய்வதால் தனது மண்ணின், மிகப் பெரிய தொழிலுக்கும், அதைச் சார்ந்து வாழ்வோருக்கும் 'உயிர்' ஊட்டும் ஆசையில்தான் அனுப்பியது. ஆனால் அதற்கு டில்லி அனுப்பிய பதில்;

முடியாது!

முடியாது!!

என்பதுதான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, நாம் கைத்தறிக்கு முக்கியம் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருப்பதால், தறித்துணிக்கு வரம்பு கட்டாமல், ஆலைத்துணி இவ்வளவுதான் 'வரலாம்' என்று ஒரு 'உச்சவரம்பு' நிர்ணயுங்கள் என்று கேட்டது சென்னை. மறுத்தது டில்லி.

இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போதுதான், நமக்குப் பிரிவினை கோருவதின் நியாயமும், நமது காரியங்களை நாமே கவனித்துக்கொள்ள வேண்டிய அதிகாரம் பெறவேண்டிய அவசியமும் மென்மேலும் உரமாகிறது.

கோரிக்கைக்கு இப்படிப் பதில் கிடைத்துவிட்டதே என்று என்ன செய்ய முடியும், சென்னை! நமக்கு வேண்டுமானால், முகத்தை 'முட்டாக்கு' போட்டு எப்படியெப்படி பதில் கூறலாம் என்று முயற்சிக்கலாம்—சிக்கல் தீருமா!!

இதே நிலை, இன்று மட்டுமல்ல, எப்போதும் தொழில் துறையில், நிச்சயம் தொடரும்.

"வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது" எனும் நமக்கு 'வாய்மூடி' போடுவதற்காக, அதைச் செய்யப்போகிறோம், இதைச் செய்யப்போகிறோம எனலாம் அமைச்சர்கள்.

ஆனால் டில்லி, தன் இலாபத்தை இழக்க ஒரு போதும் துணியாது! தென்னாட்டுத் தறியை வஞ்சித்தாவது, வடநாட்டு ஆலைகளைக் கொழுக்க வைக்குமே ஒழிய, நமக்கு உதவாது. ※

தோழர்களுக்கு

★ புதுக்கோட்டை பொதுக்குழுவில் முடிவெடுத்தபடியும், கழகத்தின் பொதுத்தேர்தல் அண்மையில் நடைபெற ஆவன செய்யப்படவேண்டியதையொட்டியும், சிற்றூர்-பேரூர்-நகரக் கிளைகள் தத்தமது தற்போதைய உறுப்பினர்களைப் புதுப்பித்தும் புதிதாகச் சேரவிருக்கும் உறுப்பினர்களைச் சேர்த்தும் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப 1--4--59-ஆம் நாளிலிருந்து 30—6—59-ஆம் நாள் வரையில் காலம், வரையறுக்கப்பட்டுள்ளது.

★ உறுப்பினர் கட்டணம் வழக்கமான முறைப்படியே ஒவ்வொரு உறுப்பினரிடமும் 50-புதுக்காசுகள் வீதம் வசூலிக்கப்படவேண்டும், ஒவ்வொரு உறுப்பினர் கட்டணத்திலும் 25-புதுக்காசுகள் அந்தந்த கிளைக் கழகங்களால் வைத்துக்கொள்ளப்பட்டு, மீதமுள்ள 25-புதுக்காசுகள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

★ உறுப்பினர்கள் புதுப்பிக்கப்படுதலும் புதிதாகச் சேர்க்கப்படுதலும் அதற்கெனத் தலைமைக் கழகத்தால் அச்சிடப்பட்டு அனுப்பப்பெறும் விண்ணப்பத் தாள்களில்தான் பதிவு செய்யப்பட்டுத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். வெற்றுத் தாளிலோ வேறு முறையான தாள்களிலோ பதிவுசெய்து அனுப்பப்படும் உறுப்பினர்களின் விவரங்கள் பதிவு செய்து கொள்ளப்படமாட்டா.

★ தலைமைக் கழகத்தால் அச்சிடப்பெற்ற உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாள்களை அந்தந்த மாவட்டச் செயலாளரிடமோ, அல்லது அவரால் அறிவிக்கப்பட்ட பொறுப்பாளரிடமோ பெற்றுக்கொள்ளலாம். தலைமைக் கழகத்திலிருந்து, உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாள்கள் கிளைக் கழகங்களுக்கு நேரடியாக அனுப்பப்படமாட்டா.

★ உறுப்பினர்கள் சேர்க்கும் பணி, கிளைக் கழகச் செயலாளர்கள் மூலமும், கிளைக் கழகங்கள் நிறுவப்பெறாத ஆனால் நிறுவப்பெறும் நிலையிலுள்ள ஊர்களில் மாவட்டச் செயலாளராலோ அல்லது மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்படும் வட்டப் பொறுப்பாளராலோ, நியமிக்கப்படும் பொறுப்பாளர் மூலமும்தான் நடைபெறவேண்டும். கிளையின் செயலாளர் அல்லது உருவாகப்போகும் கிளையின் பொறுப்பாளர் ஆகியவரின் கையொப்பத்தோடுதான் உறுப்பினர் விண்ணப்பத்தாள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

★ புதுப்பிக்கப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் கட்டணத் தொகையில் சரி பகுதியை (ஒவ்வொருவர்க்கும் 25 புதுக்காசு வீதம்) தலைமைக் கழகத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பி அந்தப் பற்றுச்சீட்டை (இரசீதை) உறுப்பினர் விவரங்களடங்கிய தாள்களுடன் இணைத்துத் தலைமைக் கழகத்திற்கு நேரடியாக அனுப்பவேண்டும்.

★ 1955-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து 1959-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாள்வரை சேர்த்தனுப்பப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தங்கள் உறுப்பினர் உரிமையை மறு அறிக்கையில் குறிப்பிடும் காலம்வரையில் பெற்றவராவர்.

★ மார்ச் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாள்வரை எந்தக்கிளையும் புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்தனுப்பும் பணியில் ஈடுபடவேண்டாம் என்று கிளைகளெல்லாம் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

★ **1—4—59**-ஆம் நாளிலிருந்து **30—6—59**-ஆம் நாள் வரையில் புதுப்பிக்கப்படும், புதிதாகச் சேர்க்கப்பட்டும் பதிவு செய்யப்படுகிற உறுப்பினர்கள், மறு அறிக்கையில் குறிப்பிடும் காலத்திலிருந்துதான் உறுப்பினர் உரிமையைப் பெற்றவராகக் கருதப்படுவர்.

'அறிவகம்',
சென்னை-13
28—2—1959.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர் தி. மு. க.

எழுகிறது ஆந்திரம்!

அவசியம் நீங்கள் வரவேண்டும். ஜனநாயகத்துக்காகப் பாடுபடும் முக்கியமானவர்களில் ஒருவரான நீங்கள் வந்திருந்து, எங்கள் முயற்சிக்கான ஆலோசனைகளையும், வாழ்த்துக்களையும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள்,

காகனி வெங்கடரத்னம்,

M. L. A.

வரவேற்புக்குழுத் தலைவர்.

*

ஆந்திரத்து காங்கிரசு, வியப்புறத்தக்க வேகத்தில் சரிந்த வண்ணமிருக்கிறது! சட்டமன்ற உறுப்பினர்கள், முப்பது பேருக்கு மேற்பட்டோர், காங்கிரசிலேயிருந்து விலகியதோடுமட்டுமல்ல, விஜயவாடாவிலே கூடி, காங்கிரசின் போக்கினைக் காரசாரமாகக் கண்டித்திருக்கிறார்கள்-முடிவில் புதியதோர் கட்சியையும், 'ஜனநாயகக் கட்சி' என்ற பெயரிலே துவக்கியிருக்கிறார்கள்!!

விஜயவாடாவிலே கூட்டப்பட்ட மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் — காகனி வெங்கடரத்தினம் என்பார்—என்னையும் அழைத்து கடிதம் எழுதியிருந்தார்......

ஆந்திர காங்கிரசின் இன்றைய நிலையினையும், அங்கே மலிந்துவிட்டுள்ள ஊழல்களனைத்தினையும் படம்பிடித்துக் காட்டுகிற முறையிலே அமைந்திருக்கிறது அந்தக் கடிதம். ஜனநாயகம் அங்கே சாக்காட்டுக்கு அனுப்பப்படுவதையும், இலஞ்சமும் இன்னும்பல ஊழல்களும், ஒவ்வாத செயல்களும் பெருகியிருப்பதனையும் பற்றி, அந்தக் கடிதம் தந்திருக்கிற படப்பிடிப்பு, ஆந்திரத்தில் மட்டுமல்ல, நாடெங்கணும் இன்றைய காங்கிரஸ் எப்படியிருக்கிறது என்பதைக் காட்டுவதாகும்.

"காங்கிரஸ் அரசு, சதிக்கிடங்காகி விட்டது. சட்டசபையில் பெற்றிருக்கும் பலத்த 'மெஜாரிடி'யைக் காட்டி, தீய வழிகளிலே செல்கிறது. இலஞ்சமும், ஊழலும், வேண்டியவர்களுக்கு இலாபம் தேடிக்கொள்ளுவதும் மலிந்து விட்டது."

என்று குறிப்பிடுகிறார்! இதனைக் கண்டித்து, உண்மையான ஜனநாயகம் மலரச்செய்யவே, தாங்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியைவிட்டு விலகியிருப்பதாகவும் அவர் தீட்டியுள்ளார். காங்கிரசின் எதேச்சாரப் போக்குக் கண்டு மனம் நொந்து, விஜயவாடாவில் கூடிய இவர்களின் மாநாட்டின் பெயரே,

சி. என். ஏ.

ஆந்திரப்பிரதேச ஜனநாயக ஊழியர்கள் மாநாடு என்பதாகும்!! ஆனால், ஆட்சியிலே அமர்ந்துள்ள காங்கிரஸ்காரர்கள், பிரிந்து போனவர்களின்மீது, பழியையும் குற்றங்களையும் வீசலாம; வெகு எளிதில், நாடெங்கும் பரப்பும் வாய்ப்புகளையும் பெற்றிருப்பவர்கள் அவர்கள். கண்சாடை காட்டினாலே, அதைப் புரிந்துகொண்டு, "தேசியத்தை அழிக்காதீர்! காங்கிரசைப் பிரிக்காதீர்!", என்று புத்திபோதிக்கும் ஏடுகள் ஏராளம். இவையெல்லாம் உணராதவர்களல்ல, விஜயவாடாவில் கூடியவர்கள். ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களின் கிளர்ச்சியினையும், அதனால் அவர் பெற்ற ஏச்சையும் பேச்சையும், நன்றாகத் தெரிந்தவர்கள் அவர்கள்.

இருந்தும், அவர்கள் கண்டிக்கிறார்கள்! விலகுகிறார்கள்! புது இயக்கம் தோற்றுவிக்கிறார்கள்!! இது, அவர்தம் உள்ள உரத்தை மட்டுமல்ல, ஊழல்கள் எவ்வளவு மலிந்துவிட்டிருக்கின்றன இன்றைய ஆட்சியில் என்கிற உண்மையினையும் எடுத்துக்காட்டுகின்றது. ஊழல்கள் மலிந்துவிட்டன! சதிக்கிடங்காகிவிட்டது! — உண்மைதான். இதனை எல்லோரும் உரைக்கிறார்கள், இதற்கு என்னபரிகாரம் காணப்படவேண்டும்? சுலபமான வழி, "எல்லா ஜனநாயக சக்திகளையும் ஒன்று சேர்க்கவேண்டும்; மக்கள் மன்றத்திலே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்; அவர்தம் தீர்ப்பைப்பெறவேண்டும்; ஆட்சிப் பீடத்தைப் பெறவேண்டும்; தூசுகளைத் துடைக்கவேண்டும்," என்பதுதான்.

இந்த வழி மாநாட்டிலே கூடியோர் உள்ளத்திலே இருந்தது என்பது தெள்ளத்தெளிய விளங்குகிறது, அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து.

திட்டமென்னவோ மிக எளிதானதுதான் — எவராலும் கடைப்பிடிக்கத்தக்க வகையிலே அமைந்திருப்பதுதான்! ஆனால், அந்தத் திட்டம், இப்போது இந்தத் துணைக்கண்டத்திலே இருக்கிற சூழ்நிலையில், இந்திய அரசிய

லமைப்பின் வரை முறைகளுக்கு உட்பட்டு, எந்த அளவு நடைமுறை சாத்தியமாகக்கூடும் என்று எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது.

ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவதன் மூலம் காங்கிரசாருக்கு நல்லதோர் பாடம் புகட்ட முடியும் என்று எண்ணும்போது, எப்படி அதனைக் கைப்பற்றுவது என்பதையும் எண்ணிப்பார்த்தாக வேண்டும்.

இப்படிக் கூறுவதாலே அவர்களது திட்டத்தையோ, அந்தத் திட்டம் வெற்றியடைந்தால் ஏற்படக்கூடிய நற்பலனையோ, நாம் குறைத்து மதிப்பிடுவதாக எவரும் கருதத் தேவையில்லை.

தேர்தல் போட்டியிலே குதிப்பதற்கேற்ற வலுவினையும் வாய்ப்பையும் பணபலத்தையும், மற்றும்பல சாதகமான சூழ்நிலைகளையும், காங்கிரசுக் கட்சி பெற்றிருப்பதைப் போல், இந்தத் துணைக்கண்டத்திலே வேறெந்தக் கட்சியும், பெற்றிருக்கவில்லை என்கிற உண்மையினை நாம் மறக்கவோ, மறைக்கவோ கூடாது.

ஆந்திர நாட்டிலே இன்று அமைக்கப்பட்டிருக்கிற ஜனநாயகக் கட்சியினரோ, அல்லது அவர் போன்றே மற்றமற்ற மாநிலங்களிலே இயங்கி வருகிற கட்சிகளோ, காங்கிரசோடு அகில இந்திய அளவில் தேர்தல் களத்திலே குதித்து, மகத்தானதோர் எதிர்ப்பினைத் தரத்தக்க அளவு பலம் பெற்றிருக்கவில்லை.

அந்தந்தக் கட்சிகள் அந்தந்த மாநிலங்களிலே வேண்டுமானால், மக்களாலே ஏற்றுக்கொள்ளப்படலாம்,—ஆதரவு தரப்படலாம்,—ஆட்சிப்பீடத்திலும் அமர்த்தப்படலாம். ஆந்திரத்திலே ஜனநாயகக் கட்சி ஆட்சிப்பீடமேறலாம். பம்பாய் மாநிலத்தில் சம்யுக்த மகாராஷ்டிர சமிதி ஆட்சியைக் கைப்பற்றலாம் —நடைபெறமுடியாத நிகழ்ச்சிகளல்ல இவை.

ஆந்திரத்திலும் தமிழகத்திலும் வங்கத்திலும் பம்பாயிலும், காங்கிரசு முறியடிக்கப்பட்டாலும், ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்படுகிற கட்சிகளின் நடவடிக்கைகளை மத்திய அரசு எளிதிலே தடுத்துவிட முடியும் — அதற்கென்று தனிச் சட்டங்கள் இயற்றக்கூடத் தேவையில்லை- உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார் இந்த மூன்று மாநிலங்களும் ஒன்று சேர்ந்து காரியமாற்றினாலே போதும், அந்த மாநிலங்களுக்கு அந்த அளவு வலுவும், மத்திய பாராளுமன்றத்திலே பிரதிநிதித்துவமும் இருக்கின்றன.

பின்னர் யார் ஆட்சிப்பீடத்திலே அமர்ந்தால் என்ன? காங்கிரசைத் தவிர, ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்படுகிற எந்தக் கட்சியும் தனது கொள்கை—கோட்பாட்டின் வழி ஆட்சிமுறையை மாற்றியமைத்திடவும், ஊழல்களைப்போக்கிடவும், நல்லாட்சியை ஏற்படுத்தவும் இயலாது என்ற ஓர் பரிதாபகரமான, பயங்கரமான, நிலை மாநிலங்களுக்கு இருக்கும்போது, காங்கிரசை ஆட்சிப்பீடத்திலேயிருந்து இறக்கிவிட்டு அந்த இடத்திலே வேறோர் கட்சி அமர்வதாலே என்ன பயன் விளைந்துவிடப்போகிறது? அதிகாரமில்லாத ஆட்சியின் பொறுப்பினை அடைந்தென்ன! அடையாமலிருந்தென்ன!!

தேர்தல் களத்திலே கிடைக்கக்கூடிய வெற்றி, ஆட்சிப்பீடத்திலே அவர்களை அமர்த்திட, அங்ஙனம் அமர்த்தப்பட்டவர்கள் ஏதும் செய்ய இயலாத நிலையில் தமது கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை உணர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். கேலிக்குரியவர்களாவார்கள். வென்றவர் தோற்றார்! — என்று வரலாற்றிலே பொறிக்கப்படும் அவர்களைப்பற்றி.

ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்பட்டாலும், அவர்களாலும், அவர்களைப்போன்ற மற்றமற்ற ஆட்சியினராலும், அவர்கட்கு ஆதரவு தந்த மக்களுக்கு எந்தவித உருப்படியான நன்மையையும்செய்துதர முடியாத நிலை இருக்கிறதென்று நாம் கூறுவதற்குக் காரணம், இந்தத் துணைக்கண்டத்து அரசியலமைப்பில் மாநிலங்கட்கு இருக்கிற அதிகாரவரம்புகள் மிகக்குறைவு என்பதாலேதான்.

இந்திய அரசியலமைப்பு என்ற ஒரு பொன் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது, மாநிலங்களின் கரங்களில்!

அதனாலே, மாநிலங்களிலே ஆட்சிப்பீடத்தில் அமர்த்தப்படுகிற எவரும், டில்லி மூலவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் கிழிக்கின்ற கோட்டைத் தாண்ட முடியாத வகையில் நடந்தாகவேண்டும்.

எஜமானனாக இருந்து டில்லி அவர்களை ஆட்டிப் படைக்கும் —எடுபிடிகளாக இருந்து குற்றேவல் புரிந்தாக வேண்டும் இவர்கள்!, அடிக்கொரு முறை காவடி எடுத்து — ''ஐயனே, மெய்யனே!'' என்று அகவல் பாடி — தேவைகளை, நேரம் பார்த்து, பக்குவமாக எடுத்துக்கூறி — கிடைத்ததைப் பெற்று, இயன்றால் மகிழ்ந்து, இல்லையானால் மனக்குமுறலை மிக ஜாக்கிரதையாக மூடி மறைத்து— போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து, என்ற 'திருப்தி'யை வரவழைத்துக் கொள்ளவேண்டும்!!

ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்படுபவர்கள் காங்கிரசல்லாதோராயிருப்பின், அவர்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வினை மனதிலே கொண்டு இயற்ற விரும்புகிற சட்டத்தினையும், எடுக்கத் துடிக்கின்ற நடவடிக்கைகளையும், மிக எளிதிலே தடுத்து நிறுத்திவிட முடியும், மத்திய அரசினரால் — அந்த அளவுக்கு அதிகாரங்களும் பொருள் வசதியைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் குவிக்கப்பட்டிருக்கின்றன அங்கே!

கூட்டாட்சி முறைப்படிதான் அரசியலமைப்பு ஏற்படுத்தப்படுகிறது என்று, வாய்ப்புக்கிடைத்த போதெல்லாம், இப்போது ஆட்சிப்பீடத்திலே அமர்ந்திருப்பவர்கள் பேசி வருகிறார்களென்பதென்னவோ உண்மைதான். ஆனால் உண்மையில் இந்தத் துணைக்கண்டத்திலே நடைபெறுவது கூட்டாட்சியா, என்ற ஐயப்பாடு, நமக்கு மட்டுமல்ல, அரசியல் தத்துவ மேதைகளுக்கே எழுகின்ற வகையில் மத்திய அரசு தனது அதிகார பலத்தையும், பொருளாதார பலத்தையும் நாளுக்கு நாள் பெருக்கிய வண்ணமிருக்கிறது.

இங்ஙனம் பிடி அங்கே கிடைத்துவிட்ட பிறகு, மாநிலங்களிலே உள்ள ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவதாலே எதைச் சாதித்துவிட முடியும்? அங்ஙனம் ஆட்சிப்பீடம் ஏறுபவர்கள், ஒன்று டில்லி மூலவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, எது எப்படியானால்

நமக்கென்ன என்று உள்ளத்தைத் திடப்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றேல் என்ன ஆனாலும் சரி, வருவது வரட்டும் என்று எதிர்த்திடத் துணிய வேண்டும்.

இந்த இரண்டு வழிகளிலே எது பின்பற்றப்பட்டாலும் நாட்டு மக்களுக்கு உருப்படியான நன்மை ஏதும் ஏற்பட்டுவிடப்போவதில்லை — முதல் முறையைக் கையாண்டால் மக்களைப் பகைத்துக்கொண்டாக வேண்டும், இரண்டாவது வழியின் மூலம் மத்திய அரசின் பகையினைப் பெறவேண்டி வரும்!

இந்த இரண்டு பகையிலே எதைப் பெற்றாலும், ஆட்சிப்பீடம் ஏறுவதன் மூலம், ஆந்திர ஜனநாயகக் கட்சியினைப் போன்ற கட்சிகள் எதைச் சாதிக்க விரும்புகின்றனவோ, அதைச் சாதிக்க இயலாது போவதுமட்டுமல்ல, கேலிக்குரியவர்களுமாவார்கள்.

எனவேதான் ஜனநாயக் கட்சியினர் தருகின்ற திட்டம் எளிதானது, ஜனநாயகக் கோட்பாட்டுக்கேற்ப அமைந்திருப்பது என்றாலும், நடைமுறைக்கு ஒவ்வாதது, இப்போதிருக்கிற அரசியலமைப்பில்.

தேர்தல் களத்திற்கென்று காங்கிரசுக் கட்சி, இந்தத் துணைக் கண்டம் முழுவதிலும், 'தீனி' போட்டு வைத்திருக்கிற மாபெரும் பட்டாளத்தை முறியடிப்பது முதல் கஷ்டம்—அப்படியே முறியடித்து அங்கங்கே சிற்சில கட்சிகள் வெற்றி கண்டாலும், முடிவில் அவர்கள் தோற்றோடிய காங்கிரசாராலேயே கைகொட்டிச் சிரிக்கப்படுகின்ற பரிதாபமானதோர் நிலைக்கு ஆளாகவேண்டி வரும்!

எனவேதான், விஜயவாடாவில் கூடிப் புதுக்கட்சி அமைத்தோர் உருப்படியான எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அவர்களுக்குச் சிற்சில உண்மைகளை எடுத்துக்கூற விழைகிறோம், அவர்களும் நம்மனோர் என்பதால், நாட்டுமக்களின் வாட்டம் போக்கிடவும், ஜனநாயகத்தைக் காத்திடவும் அவர்கள் முனைந்து நிற்கின்ற காரணத்தால்.

தேர்தல் களத்திலே குதிப்பதும், வெற்றிபெற எத்தனிப்பதும், வெற்றி பெற்று ஆட்சிப் பீடத்திலே அமர்த்தப்பட்ட பிறகு நாட்டு மக்களுக்கு நலம்பல செய்ய எத்தனிப்பதும் ஒருபுறம் இருக்கட்டும்.

தேர்தல் சமயத்தில் என்ன சொல்லி இவர்கள் ஓட்டுக்கேட்கப் போகிறார்கள்? எந்தக் கோட்பாட்டைக் காட்டி எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள், என்று வேண்டுகோள் விடுக்கப்போகிறார்கள்?

எந்த ஒரு அரசியல் கட்சியும், நல்லதோர் கோட்பாட்டை—வரையறுக்கப்பட்ட கொள்கையினை எவருக்கும் எளிதில் புரிந்திடத் தக்க குறிக்கோளை, நிச்சயமாகப் பெற்றாக வேண்டும். இன்றேல் அது மக்களுள்ளத்திலே இடம் பெற இயலாது என்பது மட்டுமல்ல, கட்சி என்று அழைக்கப்படுதற்கேற்ற அருகதையே பெறவில்லை என்றுபொருளாகும்.

பொதுவாழ்வுத் துறையிலே ஈடுபடுவோர் அப்பழுக்கற்றோராக —தூய்மையின் எடுத்துக்காட்டுகளாக விளங்க வேண்டும் என்று கருதுவது நல்லெண்ணத்தின் அறிகுறி — தூய உள்ளத்தின் பிரதிபலிப்பு. இலஞ்சமும் இன்னபிற ஊழல்களும் களைந்தெறியப்பட வேண்டுமென்று கருதுவதும், நேர்மையையும் நல்லெண்ணத்தையும் காட்ட வல்லது. ஆனால் அவையெல்லாம் எவையெவை, கூடாதவை என்று தரப்படுகின்ற விளக்கங்களாக இருக்குமே தவிர, ஒரு கட்சியின் கோட்பாடுகள் என்று எப்படிக் கருதிவிட முடியும்? ஆந்திரத்தின் முதலமைச்சராக உள்ள சஞ்சீவிரெட்டியின் ஆட்சியில் இன்னின்ன குறைகள் இருக்கின்றன, இன்னின்ன ஊழல்கள் மலிந்துவிட்டன — இந்த இந்த வகையிலே நாட்டு மக்களின் நலன் பாதிக்கப்படுகிறது என்று சுட்டிக் காட்டுபவர்கள், ஒரு முக்கியமான உண்மையினை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

அவர்களாலே சுட்டிக்காட்டப்படுவன வெல்லாம் குற்றச்சாட்டுகள்!—கோட்பாடுகள் அல்ல!!

அந்தக் குற்றச்சாட்டுகளைக் காட்டித்தேர்தலில், சிற்சில இடங்களில், அவர்கள் வெற்றி பெறக் கூடும் — அந்த வெற்றிகள் மகத்தானவையாகக்கூட இருக்கக் கூடும்.

ஆனால், அந்தக் கட்சி நல்ல, வரையறுக்கப்பட்ட, திட்டவட்டமான கோட்பாட்டைக் கொண்டிருக்கிறதென்று மக்கள் நம்பினாலொழிய—அந்தக் கட்சி தேவைதான் என்று அவர்கள் கருதினாலொழிய, எப்படி அந்தக் கட்சிக்கு ஓட்டுக் கிடைக்கும்? திட்டவட்டமான ஓர் கோட்பாடு மக்கள் மன்றத்திலே வைக்கப்படாத நிலையில், "இந்தக் கட்சிக்கு ஆதரவு தருவதைவிட, காங்கிரசையே ஆதரிக்கலாம்" என்று அவர்கள் கருதிவிடுவாரானால், ஆச்சரியமென்ன அதில்?

அதையும்மீறி ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவு கிடைப்பதாகவே வைத்துக்கொள்வோம். பற்பல இடங்களில் தோற்றதாலே காங்கிரசார், விழிப்படைந்து, மக்கள் குரலுக்கு மதிப்புத்தரத் துவங்கிவிடுவார்களானால், பிறகு ஜனநாயகக் கட்சி இருப்பது தேவையுமில்லை--இருப்பதிலே பொருளுமில்லை!!

எனவேதான், திட்டவட்டமான தோர் கோட்பாட்டை ஜனநாயகக் கட்சி தீட்டிக்கொண்டாகவேண்டும் — அந்தக் கோட்பாட்டை அடைவதற்கான வழிமுறைகளை வகுத்தாகவேண்டும்.

திராவிடம் பிரிந்து, தனி நாடாகி, முழு உரிமை பெற்றுத் திகழ்ந்திடவேண்டும் என்ற கோட்பாட்டினை, எவர் துணையையும் தேடிப் பெறாமல், இடுக்கண் பலவற்றையும் தாங்கிக்கொண்டு, அச்சம் தயை தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல் மக்கள் மன்றத்திலே வைத்து வருகின்றது தி. மு. க.

அவர்கள் தருவதோ, ஊழல்கள் எனும் ஒரு நோயினைப் போக்கிடும் மருந்து — நம்முடையதோ உயர்ந்ததோர் கோட்பாடு.

இந்த வேறுபாட்டை அவர்கள் நன்கு உணர்ந்தாகவேண்டும்.

விஜயவாடாவிலே கூடித்தனிக் கட்சியை அவர்கள் அமைத்திட்ட போது, அவர்கள்பால் அந்த மாநிலத்து ஆட்சிப் பொறுப்பிலே

யுள்ளவர்கள் கண்டனக் கணைகளை விடுத்தது போன்றே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் கணைகள் வீசப்படுகின்றன! "கற்பனாவாதிகள், கனவுலகிலே சஞ்சரிப்போர், சமுதாயத்தைச் சாக்காட்டுக்கு இட்டுச்செல்ல எத்தனிப்போர்" என்ற வர்ணனைகளும், இன்னபிற இழி மொழிகளும் வீசப்படுகின்றன கழகத்தின்மீது!!

பத்திரிகைகள் பல, அதுவும் பலம்வாய்ந்தவை, பற்பல இடங்களிலும் பரவுகின்ற வாய்ப்பினையும், வசதியையும் பெற்றிருப்பவை, ஆட்சியாளர்தம் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்திடச் சித்தமாயிருப்பதால், திராவிட முன்னேற்றக் கழகத்தினைப்பற்றி எப்படியெல்லாமோ அவதூறுகளைக் கிளப்பிவிட முடிகிறது அவர்களால்.

அண்மையிலேயிருக்கிற ஆந்திரத்திலேயுள்ள மக்களுக்குக் கூட நம்மைப்பற்றியும், நாம் வளர்ந்து வருகிற வேகத்தைப்பற்றியும், பெற்றுள்ள வலுவினைப்பற்றியும், காங்கிரசாரின் கடுமையான எதிர்ப்புக்கிடையே நாம் தேர்தலில் 17-இலட்சம் ஓட்டுக்களுக்கு மேல் பெற்றதையும், போன்ற உண்மையான தகவல்கள் கிடைக்க மார்க்கமில்லை. காங்கிரசார் பெற்ற ஓட்டுகளில் மூன்றில் ஒருபங்குக்கு மேல் நம்மாலே பெறமுடிந்தது என்ற உண்மைமட்டுமே போதும், நமக்கு மக்களிடம் அமோகமான ஆதரவு இருந்து வருகிறது என்பதனை விளக்கிட!!

என்றாலும், தமிழகமும் ஆந்திரமும், கேரளமும் கன்னடமும், நான்கும் ஒரு கூட்டாட்சி அமைக்கப்படவேண்டும — என்று நாம் தினம் தினம் எழுப்பி வருகிற குரல், நம்மாலே மக்கள் மன்றத்திலே வைக்கப்படுகிற கோட்பாடு என்றுவது ஓர் நாள், எப்படியாவது; ஆந்திரத்திலேயுள்ள ஜனநாயக வாதிகளை ஈர்த்திடும்— அவர்கள் நம் குறிக்கோளிலே அக்கறை செலுத்துவார்கள்— என்று நாம் திடமாக நம்புகிறோம்.

ஆந்திரத்திலே இருக்கின்ற இயற்கைச் செல்வங்கள் ஏராளம், பூமிக்கு உள்ளும் புறமும். அந்த நாட்டின் குடிகளும் மறக்குடி மாந்தர் — மிகப் புகழ்வாய்ந்ததோர் வரலாற்றினைப் பெற்றிருப்போர்.

ஆனாலும் அவர்கள் கரத்திலும், மற்றவர்கள் கரத்திலே பூட்டப்பட்டிருப்பதைப்போல் பொன் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது— அவர்கள் தாயகம் அடிமை நாடாய் வடவரின் வேட்டைக் காடாய் இன்று தாழ்வுற்று நிற்கிறது.

எனினும், என்றுவது ஓர் நாள் இதற்கோர் முடிவு ஏற்பட்டே தீரும். மத்திய அரசிலும் காங்கிரசாரே ஆட்சிப்பீடத்திலேயிருப்பதாலே, டில்லி மூலவரிடம் கை கட்டி நிற்பதையோ, காமேந்திட வேண்டிய நிலை இருப்பதனையோ, தன்மானத்துக்கு இழுக்கென்று கருதாமல் இருக்கக்கூடும்.

ஆனால் மாநிலத்தின் ஆட்சிப் பீடத்திலே காங்கிரசல்லாத வேறோர் ஆட்சி வீற்றிருப்பின் நிலை என்ன ஆகும்? எவ்வளவு மோசமாக இருக்கும்?

இன்று முணுமுணுப்போரெல்லாம் அன்று முழக்கமிடுவார்கள் —அகில இந்திய வாதம் உடைபடும் — வடவருக்கும் நமக்கும் ஒட்டுறவு காட்டிப் பேசப்படுகிற போக்கு மாறும் — அன்னை நாட்டின் விலங்கொடித்திடும் மகத்தான பணிக்குப் படைவரிசை பெருகும்.

எனவேதான் நமது கோட்பாட்டை, திட்டவட்டமான கொள்கையினை, ஆந்திரத்திலேயுள்ள ஜனநாயக வாதிகள்பால், புதுக்கட்சி அமைத்துக் கொண்டோரின் பார்வைக்கு வைக்க விரும்புகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

"ஹோம்லண்ட்" இதழ்மூலம், நமது கருத்துக்களையும், ஆசையையும், அவர்களுக்கெல்லாம், இந்தக்கிழமை தெரிவித்தும் இருக்கிறோம்.

இந்தக் கொள்கைதான் நாட்டுக்கு நன்மை பயக்கவல்லது, இந்த நாட்டுச் செல்வங்களைத்தனையும் இந்த நாட்டிலே இருந்திடச் செய்வது, வடவரின் வேட்டைக் காடாகத் தாயகம் இருக்கின்ற தீய தான நிலைமை மாற்றியமைத்திடும் வல்லமை பெற்றது. எனபதனை அவர்கட்குத் தெரிவித்து இருக்கிறது திராவிட முன்னேற்ற கழகம்.

விஜயவாடாவிலே கூடி, எடுக்கப்பட்ட முடிவில் அவர்கள் காட்டிய வீரத்தினையும், நேர்மையான போக்கினையும் கண்டு, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால், அதே சமயத்தில், கழகத்தின் கோட்பாடுதான், அவர்களாலே சுட்டிக்காட்டப்படுகின்ற பற்பல ஊழல்களை மட்டுமல்ல, அந்த ஊழல்செய்வோருக்கு உறு துணையாக நிற்கின்றோரின் ஆணவத்தையும், அழித்திட வல்லது என்பதனையும் நினைவுபடுத்துகிறது.

ஆந்திரத்திலேயுள்ள இப்படிப்பட்ட ஜனநாயகவாதிகள் நமது கோட்பாட்டை, இலட்சியத்தை ஏற்றுக்கொள்வரேல் நம தாயகத்தில் வரலாற்றில் புதியதோர் யுகம் தோன்றிவிட்டதென்று பொருள். அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

மூளைக்கும் உடலுக்கும் போதிய அளவு வேலையைப் பகல் வேளையிற் கொடுக்காத வன் இரவு நிம்மதியாகத் தூங்க முடியாது. கட்டுமட்டாக உணவை உட்கொள்ளாமல் குறைவாகவோ அதிகமாகவோ சாப்பிடுகிற வனுக்கும் நித்திரையினுல் சுகம் ஏற்படாது. நித்திரை ஒரு விதத்தில் சர்வரோக நிவாரணி—ஆனல் புட்டியில் அடைத்து விளம்பரப் படுத் தப்பட்டு விலைக்குக் கிடைக் கும் மருந்தல்ல.

மிட்டா மாணிக்கம்

— பழநி —

மிட்டா மாணிக்கம், காங்கிரசுக்கட்சியில் உப்பு சத்யாக்கிரகம் செய்தவரா, ஆகஸ்டுப் போரில் ஈடுபட்டவரா என்று கேட்காதீர்கள். அவருடைய காரியஸ்தர், மண்டல காங்கிரசுக்குத் தலைவர்; கணக்கப்பிள்ளை, ஒரு காங்கிரஸ் வார ஏட்டுக்கு ஆசிரியர்; தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலே கூட அரை டஜனுக்குமேல் அவருக்கு வேண்டியவர்கள் இருப்பதாகச் சொல்வார்கள். எந்த மந்திரியாவது, எங்களூர்ப் பக்கம், எதையாவது திறந்துவைக்கவோ, விழாவுக்கோ வந்தால், மிட்டாமாணிக்கம் இருக்கிற பக்கம் திரும்பி இரண்டொரு தடவையாவது சிரிக்காமல் போக மாட்டார்கள்! எனவே, அவரும் காங்கிரசுக் கட்சி.

"எனக்கும் அவருக்கும், எந்த விதமான விரோதமோ, சண்டை சச்சரவோ இடையாது. எனாலும், என்னைக் கண்டால், முகத்தைத் திருப்பிக்கொள்ளுவார். கோயிலுக்குத தர்மகர்த்தா அவர்! நான் சுயமரியாதைக்காரன்!! — இதுதான, காரணமாக இருக்குமோ என்னவோ.

கொஞ்சம் நல்ல சாப்பாடு. அதனால், பக்கத்திலுள்ள 'பூங்கா'வில் வந்து உட்கார்ந்து, காசில்லாமல் கிடைக்கும் காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தேன். யாரோ, தோளில் கைவைப்பது போலிருந்தது. திரும்பினேன். என்ன ஆச்சரியம்! மலை, மண்புற்று நோக்கி வராது என்பார்கள்; ஆகாயம், தரைக்கு எப்படி வரும்? ஆனால் வந்திருந்தது! மிட்டா மாணிக்கம்! அவர் என்னிடம் வந்திருந்தார்!!

"என்னப்பா, காத்து வாங்கிறே போலிருக்கு கவலையில்லாமே! கொடுத்துவைச்சவனே. என்னைப் போல உனக்குஎங்கேயிருந்துவரப் போவுது, கவலை. என் மனம் என்ன பாடுபடுது தெரியுமா?", என்று சொல்லிக்கொண்டே, அருகே வந்து உட்கார்ந்தார். ஆச்சரியம் மேலும் அதிகமாயிற்று, எனக்கு! மிட்டா உண்டு— பங்களா இருக்கிறது — பணம் ஏராளம் பெட்டியில — என்னைப் போல, அவர் என்ன அன்றாடங் காய்ச்சியா? இவருக்கு எங்கேயிருந்து வந்து குதித்தது, கவலையும் கஷ்டமும்!—என்று எண்ணினேன். கொஞ்ச நேரம் இருவரும் என்னபேசுவதென்று, புரியாமலே இருந்தோம்.

'நீ சொல்றது எல்லாம் நூற்றுக்கு நூறு உண்மைன்னு இப்பதான் தெரியுது. இந்தக்காங்கிரஸ் காரன்களைப்பத்தி நல்லாத்தான் தெரிஞ்சுவைச்சிருக்கே."

மேலும், ஆச்சரியம் அதிகரித்தது, எனக்கு. மிட்டா மாணிக்கமா இப்படிப் பேசுகிறார்! என்ன!! — என்று திகைத்தேன்.

"காங்கிரசுக்கு மண்டைக் கனம் பிடித்துவிட்டது; குப்பைக் கூடையாகி விட்டது. கொழுப்பு அதிகமாகி விட்டது. திமிர், நிரம்பிவிட்டது. இப்படியெல்லாம் வரும் என்று தெரிந்துதான், மகாத்மா காந்தி, கலைக்கச் சொன்னார் காங்கிரசை... என்றெல்லாம், நீ சொல்வாயே, உண்மைதான்."

உண்மைதான்! ஆனால், மிட்டா மாணிக்கம் போல, இவ்வளவு கடுமையாக நான் என்றும் பேசியதுமில்லை; ஏசியதுமில்லை. என் சுபாவப்படி, கொஞ்சம் இலைமறை காயாகத்தான் இதையெல்லாம் பொதுக்கூட்டத்தில் கூறுவது வழக்கம். இதற்கே, அவரிடம் வியாபார வகையில் கட்டுப்பட்டிருந்த என் மாமனாரிடம் போய், மிட்டா மாணிக்கம், மிரட்டுவதுண்டு! அப்படிப்பட்டவர் வாயிலிருந்து, இந்தச்சொற்கள் வந்தனவென்றால்? மிட்டா மாணிக்கம், காங்கிரசைத் கண்டிக்கிறார் என்றால்!! உடம்பில், தூய கதராடைதான் இருந்தது, வாயிலிருந்தோ, காங்கிரசைப்பற்றி, கடுமையான உரைகள் வந்து விழுந்துகொண்டிருந்தன.

"ஏம்பா! ஆட்சிக்கு வந்துவிட்டோம் என்றால், சாத்யமா, வேண்டுமா என்றெல்லாம் பார்க்காமல் மனம் போனபடியா நடப்பது? நீயே,சொல்லு! தனிப்பட்டவனின் சொத்துக்களையெல்லாம் சுரண்டும் விதத்தில், எதேச்சாதிகாரமாகவா நடப்பது? இவன்களை யார் கேட்டா நிலத்துக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கச் சொல்லி! ஒருத்தன்

இவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்ல, யார் இவர்கள்!! கராச்சியில், காங்கிரஸ் மாநாடு கூடியபோது, யாரும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கக்கூடாது என்றுதான் வரம்பு நிர்ணயித்தார்கள், இப்போது, சம்பளமாக மட்டும், மாதாமாதம் 1500 ரூபாய் வாங்கிக்கொண்டு, நிலத்துக்கு மட்டும் வரம்புகட்டுவோம் என்கிருர்களே!! இதென்னப்பா, நியாயம்? என்னைப் போன்ற மிட்டா மிராசுகளெல்லாம், 'கஷ்டப்பட்டு' சம்பாதிச்ச பணத்திலே நன்கொடை வாங்கித்தான், போன தேர்தலிலே ஜெயிச்சோம் என்கிறதைக்கூட மறந்துட்டாங்களே! நன்றிகெட்டவர்கள்!!"

காங்கிரஸ், இவர் விஷயத்தில், அப்படியொன்றும் நன்றிகெட்டு நடக்கவில்லையென்பது ஊருக்குத் தெரியும். காங்கிரசின் தயவால், என்னென்னவோ சலுகைகள் பெற்ருர் என்றெல்லாம் சொல்லுவார்கள். பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் தயவிருந்தும் அவரால், சிலோனுக்கு மட்டும், பீடிகளும், துணிகளும் ஏற்றுமதி செய்ய 'பெர்மிட்' கிடைக்கவில்லையென்பது தவிர, அவருக்கு எந்த விதக் குறைவும் வைக்கவில்லை, காங்கிரஸ் கட்சி!!

"மிராசுதாரர்களெல்லாம், இவுங்க உத்தரவு போட்டதும் பயந்துடுவாங்கன்னு நினைக்கிருங்கபோலிருக்கு! நன்கொடைக்கு என்கிட்டே வந்தபோது எப்படிக் குழைஞ்சாங்க தெரியுமா!! அவனைச் சொல்லி என்ன பிரயோசனம்? தப்பெல்லாம் எங்கமேலே தான். 'லாட்டரி' அடிச்சப்ப, ஓடி ஓடி, பணம் கொடுத்து, ஜயிக்க வைச்சோமில்லே. அதுக்கு, பலன் கைமேலே கிடைக்குது. இந்தா பாரு! உங்கமேலேயும் தப்பு இருக்குன்னு சொல்லுவேன். ஒரே பிடிவாதமா, எங்க பக்கம் எப்போதாவது வர்றீங்களா. எங்ககிட்டே நெருங்கக்கூட மாட்டேன்கிறீங்களே. அதனாலேதான் எல்லாரையும் பேய்க்கலாம்னு இப்ப நினைக்குது காங்கிரஸ். உச்சவரம்பு செய்யப்போருன்களாம், உச்ச வரம்பு!!"

ஏதாவது சொல்லவேண்டுமே, நான் ஆரம்பித்தேன்.

ஏங்க, இப்படி உச்சவரம்பு கொண்டாரப் போவுது காங்கிரசுங்கிறது உங்களுக்கெல்லாம் முன்கூட்டியே தெரியும்னுலே சொன்னுங்க. இப்படியொரு திட்டம் தேவைங்கிறதை நீங்கள் எல்லாம் ஒத்துக்கிட்டதாகவல்லவோ சொன்னுங்க. தேசநலனை முன்னிட்டு, இப்படிப்பட்ட சீர்திருத்தத்துக்குச் சம்மதிப்பீங்க; சந்தோஷமா உங்க சொத்தையெல்லாம் தியாகம் பண்ணவும் தயங்கமாட்டீங்கன்னுல்லே, காங்கிரஸ் தலைவர்களும் மந்திரிகளும் எடுத்து எடுத்துச் சொன்னுங்க."

"சொன்னுங்க! இப்படியே சொல்லிக்கிட்டேயிருப்பாங்க! ஆனா, செய்யமாட்டாங்கன்னுநாங்க நினைச்சோம்! இடதுசாரிக் கட்சிங்கள்ளாம் கத்துருங்களே, அதிக நிலம் ஒருத்தருக்கு ஏன், அது இதுன்னு, அந்தப் பிரச்சாரத்துக்கு இவுங்க இப்படிப் பதில் பிரச்சாரம் செய்ருங்கன்னு நினைச்சோம். இப்படியா, திடீர்னு எங்க மேலே பாயறது? ஏம்பா! இதா நாணயம்? பாகிஸ்தானைப்பார், அங்கேகூடத்தான், நிலத்துக்கு உச்சவரம்பு நிர்ணயிச்சிருக்காங்க. இவுங்களைப்போலவா? 500 ஏக்கர் வரையில் ஒருத்தர் வைச்சுக்கலாம்னு பாகிஸ்தானிலே வரம்பு வைச்சிருக்காங்க. இங்கே பதினஞ்சு ஏகர், இருபது ஏக்கருக்கு மேலே விடப்போறதில்லையாமே!"

"ஆனல், பாகிஸ்தானில் ஜமீன் ஜாகீரையெல்லாம் எந்த வித நஷ்டாடும் கொடுக்காமே சர்க்கார் பிடுங்கிக்கிட்டு இருக்கே..."

"நஷ்டாடு இல்லாமலா? அதெப்படி! இது நம்பிக்கைத் துரோகம். இங்கே நம்ப சர்க்கார் ஜமீன்தாரர்களுக்கு நஷ்டாடு கொடுக்குதே..."

"நல்லாவே கொடுக்குதுன்னு சொல்லுங்க! பாகிஸ்தானிலே எந்த விதமான நஷ்டாட்டுத் தொகையும் கிடையாது, ஆனல் இங்கே நம்ப சர்க்கார், உச்சவரம்புக்கு மேலே, ஒவ்வொருத்தருக்கிட்டேயிருந்து எடுத்துக்கிற நிலத்துக்கும் நஷ்டாடு கொடுக்கப் போவுது..."

"என்னத்தைக் கொடுப்பாங்க? ஏதோ கொடுப்பாங்க! அவுங்க இஷ்டம்போல 'ரேட்' வைச்சுக் கொடுப்பாங்க! அதானே..."

"ஆமா, உங்களுக்கு பணம் கிடைக்கும். பாகிஸ்தானிலே, பணம் கிடையாது. நஷ்டாடு என்ன என்று ஒரு கணக்குப் போட்டு, அந்தத் தொகைக்கு, நாலு வட்டி வீதம், கடன் பத்திரமா எழுதிக்கொடுப்பாங்க. இருபது, இருபத்தைஞ்சு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதை நீங்கமாத்த முடியும்..."

"கழனிகளைப் பிடுங்கிக்கிட்டு வெறும் காகிதத்திலே எழுதிக் கொடுக்கிறதா? இதென்ன அநியாயமெல்லாம் நடக்குது!"

"அயூப்கானுக்கே, இந்த உச்ச வரம்பு சட்டத்தால், நஷ்டம் வருமாம். அவர்கூட இருக்கிற சகாக்கள்கூடப் பாதிக்கப்படுவார்களாம்."

"என்னமோப்பா! இப்படிப்பட்ட போக்கையெல்லாம், அது எங்கேயிருந்தாலும் அடியோடு பேர்த்து எறிய வேண்டும். இந்தாபாரு! இதைப்போல தர்ம யுத்தத்திலே இறங்க, உன் கட்சிக்காரங்களைத் தவிர வேறு ஆள் கிடையாது. என்ன! உனக்கும் எனக்கும் இந்த மதம், இந்தக் கடவுள் விஷயத்திலே, அப்படி இப்படி அபிப்பிராய பேதம் இருக்கும். அதைக்கூட நம்ப, தள்ளிடலாம்னு வைச்சுக்கோயேன். ஆனல், இந்தக் காங்கிரஸ் கட்சியின் திமிரை அடக்கிற விஷயத்திலே, நாம்பள்ளாம் ஒண்ணு சேர்ந்து போராடணும். ஒரே மேடையிலே பேசணும். என்ன நான் சொல்றது? நமப சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி, ஒருகை பார்த்துடணும்!"

"...அதாவது, ஒரு ஐக்கிய முன்னணி அமைக்கணும்கிறீங்க"

"அதுக்கு என்ன பேருவேணும்னலும் வைச்சுக்கோ! முக்கியமாச் செய்யவேண்டியது, நாமெல்லாம் சேர்ந்து, காங்கிரசை ஒருகை பார்த்துடணும். உன் கட்சி நிச்சயமா, இதை வரவேற்கும்னு நினைக்கிறேன். எங்க உதவி, உங்களுக்குண்டு நிச்சயமா. நம்பலாம்."

கருத்தடை பற்றி!

"கருத்தடை" பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் நிறையக் கிடைத்திருப்பதால், இனிமேல் இதுபற்றி எழுதியனுப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேம். —ஆசிரியர்.

"ஆமா! ஆமா! உங்க ஆர்வம் புரியுது. உங்க சக்தியைப்பற்றி எனக்குத் தெரியாதா என்ன!!"

"ஒண்ணு சேர்ந்தோம்! அடுத்த தேர்தலிலே இந்த ஆட்களை 'பூ'ன்னு ஊதித்தள்ளிடலாம். மந்திரிசபையே அமைச்சிடலாம்."

"அருமையாயிருக்கு நீங்க சொல்றது. ஆனந்தமாக்கூட இருக்கு கேட்க! ஆனால் ஒண்ணு. அப்படியொரு மந்திரிசபை ஏற்பட்டு, அதிலே எங்க கட்சிக்காரங்களும் இருக்கும்படி நேர்ந்தால், உச்சவரம்புபற்றிக்காங்கிரஸ்சொல்லும் திட்டத்திலேயிருக்கிற சில பகுதிகளை தயா தாட்சண்ணியம் இல்லாமேநாங்கதள்ளிவிடுவோம்."

"ஆகா! தள்ளு!! சில பகுதிகளை என்ன, இந்த யோசனையையே வீசியெறிஞ்சிடலாம். வேறேமாதிரி செய்யலாம."

"வேறேமாதிரி செய்ய, கொஞ்ச நாள் பிடிக்கும். அதனலே, நாங்க மந்திரி சபையிலே இடம் பெற்று, முதலிலே நஷ்டஈடு கொடுப்பதுன்னு இருக்கிற இடம் இருக்கு பாருங்க, அதை ஒருஅடி அடிப்போம். நிச்சயமா, யாருக்கும் பணம் கிடையாது; கடன் பத்திரம் தர்ரோம், என்போம்."

"என்ன....என்ன.....சரியில்லே ...நல்லால்லே நீ பேசறது..."

"மொத்தமும் கேட்டுட்டுப் பேசுங்க. பெரிய நிலப்பிரபுக்கள் எல்லாம், இந்தச்சட்டத்திலேருந்து தப்ப என்னென்ன செஞ்சிருப்பாங்கண்ணு, தேடி அறிவோம். தம்பி, அண்ணன், சொந்தக்காரன் பேருக்கெல்லாம் யாரார், எழுதிவைச்சு, சர்க்காரை ஏமாத்தப்பார்த்தாங்கன்னு தேடியெடுப்போம். ஆத்திலேபாதி சேத்திலே பாதின்னு, காங்கிரசு செய்கிறது மாதிரியில்லாமே, சரியாவே செய்வோம். நினைச்ச உடனே செய்யாமே, வீணுகக்காலங் கடத்துருங்களேங்கிறதுதானே காங்கிரசு மேலே உள்ள கோபம் எல்லாம். செய்யப் போரோம்—செய்யப் போரோம்னு சொல்லி, அதுக்குள்ளே உங்களையெல்லாம் செய்ய வேண்டியதைச் செஞ்சி 'ரெடி'யாயிருக்கும்படி, ரொம்ப நாள் இடைவெளிதந்துவந்திருக்காங்க! நிலத்துக்குஉச்சவரம்பு நிர்ணயிக்கிறது என்பது, உடனே செய்யவேண்டிய காரியம். உங்களைப் போன்றவங்கள் எல்லாம், சொத்துக்களை, டிரஸ்டுகளாகவும், கார்ப்பரேஷன்களாகவும்; தர்ம அமைப்புகளாகவும், எத்தனையோ தகிடுதத்தம் செஞ்சு சரிபண்ணியே வந்திருக்கிங்க. இதையெல்லாம், நாங்க, ஆட்சிக்கு வந்தா கண்டுபிடிக்காமே விடமாட்டோம்"

என்ன சொல்வார் மிட்டா மாணிக்கம்! கண்களில் கனல் பறந்தது!!

"ஊம்! உன் கட்சியாகட்டும், இந்தக் காங்கிரஸ் தானாகட்டும், எங்களை ஒண்ணும் அசைக்க முடியாது. தெரிஞ்சுக்க! அவங்க, உச்சவரம்பு செய்யப்போரோம்னு சொல்ருங்க; நீங்களும், அது சரிங்கிறீங்க, முடிஞ்சா, செஞ்சு பாருங்க. சீக்கிரமா, நாங்களும், ஒரு வலதுசாரிக்கட்சி அமைச்சி, ஒரு கை பார்க்கிறோமா இல்லியான்னு பாருங்க"

"சீக்கிரமா, செம்மையா நீங்க செய்யணும்! நல்ல கட்சியிலே பூந்து, அதை நாசமாக்காமே, இப்படிச் செய்றது எவ்வளவோ மேல். அப்படியொருகட்சி அமைச்சிங்கன்னுதான், உங்களைப்பத்தி மக்களுக்கும் தெரியும். அப்புறம், உச்சவரம்புக்கே அவசியம் வராது; ஒரேயடியா, சுயநலத்துக்கும், தனி ஆதிக்கத்துக்கும் நிரந்தர 'மூடி'போட்டுமூடிவிட முடியும்"

மிட்டா மாணிக்கம் பேசவில்லை! அவர் கை பேசிற்று—ஆத்திரம் தாங்காமல்!! அது, ஒரு பிரமாதமா எனக்கு; ஆனல், பூங்காவில் இருந்த பலருக்கு, அது சரியெனத் தெரியவில்லை. ஆதலால், அவர்கள், இளம்பிஞர்கள், மிட்டாவுக்குப் பதில் சொல்ல. பதிலும், தந்தார்கள். இப்போது, எங்கள் பத்துப்பேர்மீது, கிரிமினல்வழக்கு போடப்பட்டிருக்கிறது! என்னென்ன செக்ஷன்களின்படி வழக்கு போடப்பட்டிருக்கிறது, என்று எங்கள் வக்கீல், வர்ணிக்கிருர்!!

"நீதிமன்ற நிலை நாட்டத்தான் சட்டம் என்ருலும், சட்டம்வேறு; நீதி வேறு. மிட்டா மாணிக்கம தாக்கப்பட்டார் என்பது பொய்யல்ல. நீங்கள் பத்துபேரும் அந்த இடத்திலிருந்திருக்கிறீர்கள். சில பேர் சம்பவத்தில், பங்கும் எடுத்துக்கொண்டிருந்திருக்கிறீர்கள். இதை, சர்க்கார் தரப்பில், நிரூபிக்க சாட்சியங்கள் இருக்கின்றன. இப்படிச் செய்வதற்கு, முனகூட்டியே எந்தவிதத் திட்டமும் போடவில்லை என்பதை நான் நிரூபிக்க முடிந்தால், அதுவே பெரிசு: ஆனல், அவர்கள் பக்கம் வாதாடும் வக்கில், ரொம்பக் கெட்டிக்காரர். ஆகவே, நாமும் இன்னொரு பெரிய வக்கிலைவைத்துக்கொள்ளலாமா!" என்று கேட்கிருர் என் வக்கில்.

"இது, சாம்பிள்தான்! இதைப் போல, இன்னும் ஏராளம், காத்திருக்கு, அந்தப் பயலுக்கு. எசமான், இலேசிலே விட்டுடமாட்டார். நினைச்சா தீர்த்துக்கட்டாமெ தூங்கமாட்டார்" என்கிருர் மிட்டா மாணிக்கத்தின், எடுபிடிகளிலே, ஒருவன். என்ன நேருமோ!!

"ஞான ஸ்நானம்"

"வாருங்கள், வாருங்கள்! யார் வேண்டுமானலும் வரலாம்! நிபந்தனை எதுவுமில்லை! வந்தால் போதும், வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்ரோம்!" என்ற வகையில் ஆந்திர காங்கிரசு நடந்து வருகிறது — கட்சிக்குள்ளே வரவிருக்கின்ற எவருக்கும் 'ஞானஸ்நானம்' தந்திடக் காத்து நிற்கிறது!

ஆந்திர சோஷியலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும், சுயேச்சையினர் சிலரும் காங்கிரசிலேசேர விருப்பம் அறிவித்தனராம்.

அதன் பலன்தான், அந்த மாநில காங்கிரசின், இந்தப் புதுக்கோலம்!

போட்டிருக்கிற சட்டையை மாற்றுவதற்குக்கூட, ஓரளவு யோசனை செய்வதுண்டு.

'நாம்போட்டிருக்கிற சட்டையை விட, போடப்போகிற சட்டை வெளுப்பானதா, தூய்மையானதா' என்று எண்ணிப்பார்ப்பதுண்டு!

அந்த அளவுகூட யோசிக்காமல் கட்சியை மாற்றிக்கொள்ளுகிருர்களே இவர்களை என்னசொல்வது?

அவர்கள்தான் எதற்காகவோ, "இடம் மாற" விரும்புகிருர்களென்ருல், இந்தத் துணைக்கண்ட முழுவதிலும் ஆதிக்கம் பெற்றிருக்கிற ஒரே கட்சி எங்களுடையது என்று தம்பட்டமடித்துக் கொள்ளுகிற காங்கிரசுக் கட்சி எப்படி அவர்களை ஆதரிக்கலாம்?

இந்த "ஓட்டுச்சரக்கு" எவ்வளவு நாட்களுக்கு நிலைத்திட முடியும்? எதையோ எண்ணி "ஞானஸ்நானம்" பெற்ரோர், எவ்வளவு காலம் கட்சியின் கட்டுப்பாட்டுக்கும், கோட்பாட்டுக்கும் அடங்கி நடப்பர்?

உம்! பார்ப்போம்!! இன்னும் என்னென்ன திருவிளையாடல்களோ, யாரறிவார்!!

இவர்கள் பேசினால்...!

மத்தாய்

எப்படியெப்படி எல்லாம் வாழ்ந்தேன்! இன்று, எத்தகைய அவலத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாகியிருக்கிறேன்! அந்தோ, காலமே! உன் கோல முழுவதும் காட்டிவிட்டாய், இப்போது கேலிச் சிரிப்பு உதிர்க்கின்றாய் என்னைப் பார்த்து! என் செய்வேன் நான்?

நானென்ன? என்னைப்போன்ற கோடானுகோடி மக்கள் உன் சுழலிலே சிக்கித் தவித்துச் சீரழிவதை—சீரழிந்த பலர் சிறப்புறுவதை, நாள்தோறும் காண்கிறது உலகம்!

மூலையிலே கிடந்த முந்திராவை பத்து ஆண்டுகளிலே கோடீசுவரனாக்கினாய்—டாடாவும், பிர்லாவும், டால்மியாவும் பஜாஜும் கூடக் கண்டு மிரளத்தக்க அளவுக்கு செல்வத்தையும் செல்வாக்கையும்

படிகள் — சுழல்கள், சோதனைக் கட்டங்கள்—சங்கடங்கள், சதிராட்டங்கள்!

இந்தச் சுழல்களிலே அகப்பட்டுச் சிக்கித் தவிக்கின்ற சிறு துரும்பு நான்! என்னைபோன்ற துரும்புகள் ஏராளமுண்டு அந்தச் சுழலில்!

பண்டித நேரு—அல்ல அல்ல, பார் புகழும் நேரு! அவர்தம் பிரதம காரியதரிசி நான்!—இன்றல்ல நேற்றுவரை, கடந்த 13 ஆண்டுகளாக!

பண்டித நேருவாக இருந்ததிலிருந்து பிரதமர் நேருவாக ஆன பிறகும் இருந்திருக்கிறேன் அவரோடு, அந்தரங்க காரியதரிசியாக அவரைப்பற்றிய செய்திகள் அனைத்தையும் அறிந்தவனாக!

அமைச்சர்கள், சாதாரணமானவர்கள்முதல் செல்வாக்குநிறைந்தவர் வரை, பிரதமரைப் பார்ப்பதற்குமுன், என்னைத்தானே பார்த்

செய்தி

பிரதமர் நேருவிற்கு அந்தரங்கச் செயலாளராக இருந்துவந்த M.O. மத்தாய் என்பவர் பதவியிலே இருந்து விலகியது குறித்து, பாராளுமன்றத்திலே காரசாரமான விவாதம் நடைபெற்றது.

வளர்த்துவிட்டாய் — ஆனால், அந்தோ! அதே வேகத்தில் அவனைக் கிடுகிடுவென்று கீழே இறக்கிக் கொணர்ந்து விட்டாய்!

ஆட்சிப்பீடத்திலே இருந்த புல்கானினும், மால்டோவும், மலெங்கோவும் மற்றோரும், இப்போது எங்கே? அவர்களின் முகவரி என்ன? யாரறிவார்!

கடந்த ஆண்டு பர்மாவின் ஆட்சிப்பீடத்தில் கௌரவமாக வீற்றிருந்த யூ நூவின் கதிஎன்ன? இன்று அஹிம்சா போராட்டத்தின் தளபதியாகிறேன் என்று அறிவிப்பு வருகிறது அவரிடமிருந்து —அதுவும் காவியுடுத்தி, வீதிகளில்'பவதி பிட்சாந்தேகி'என்று, ஏறக்குறைய ஒரு வாரம்; பௌத்த பிட்சுவாக அலைந்ததற்குப் பின்னால், அவராலேயே ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்பட்டிருக்கிற நீ வின் ஆட்சியை எதிர்த்து!

இது போன்ற எத்தனையெத்தனையோ கோலங்கள், குழறு

தார்கள்-பார்க்கவேண்டிய நிலையிலிருந்தார்கள்.

அவரைப் பார்க்கவேண்டும் என்று என்னிடம் சொல்வதற்கே கூட அவர்களிலே பலர் பட்டபாடு, நடுங்கிய நடுக்கம், அப்பப்ப! இப்போது நினைத்தாலும் உடம்பெல்லாம் புல்லரிக்கிறது!

அந்த அளவு செல்வாக்கு நிறைந்தவனாக, எதையும் எப்படியும் சாதிக்கின்ற வல்லமை பெற்றவனாக, ஏன் எப்படி எதனால் என்று எவரும் எந்தக் காரணத்தைக் கொண்டும், எத்தகைய சூழ்நிலையிலும், என்னைக் கேட்க முடியாது என்ற நிலையில் 'கோபுரத்திலே வாழ்ந்தேன் —இப்படிக் குப்புறக் கவிழ்வேன், அதுவும் இவ்வளவு விரைவில், நாடே என்னைப் பார்த்துக் கை கொட்டிக் கேலிசெய்கின்ற வகையில் என்று கனவாவது கண்டிருப்பேனா நான்!

என்னைப் பார்த்து ஆத்திரப்பட்டோர் அழுக்காறுகொண்

டோர், எப்படியாவது பாவி இவனைக் கவிழ்த்துவிட வேண்டும் என்று திட்டமிட்டோர் இவர்களைப் பார்த்தெல்லாம் கோபபபடவில்லை—கேலியாகச் சிரித்தேன், பாபம் பரிதாபத்துக்குரியவர்கள் என்று எண்ணிக்கொண்டேன்!

ஆனால்...முடிவில்...? இன்று நானல்லவா பரிதாபத்துக்குரியவனாகிவிட்டேன்!

பாராளு மன்றத்திலே பேசப்படுகிறது என்னைப்பற்றி — பார் முழுவதும் கவனித்துக் கொண்டிருக்கிறது. அகலக் கண்களைத் திறந்தவண்ணம்!

அப்படி நான் செய்த குற்றமென்ன?

என் தாய் செச்சிமா அம்மையார் பெயரில் ஓர் அறநிலையம் ஏற்படுத்தினேன். அந்த அற நிலையத்திற்கான நிதி, ஏறக்குறைய ஏழு இலட்சம் சேர்த்தேன்.

இதிலே தவறென்ன? எப்படி இத்தனை இலட்சங்கள் சேர்ந்தன என்று கேள்வி எழுப்பப்படுவதிலே என்ன பொருளிருக்க முடியும்?

நிதிசேர்த்தேன் என் திறமையைக்கொண்டு, முழு முயற்சியோடு!

இப்படிப்பட்ட ஆசாபாசங்கள் நேர்ந்திடக்கூடும் என்று எதிர்பார்த்துத்தான்; அந்த அற நிலையத்தின காப்பாளராக, முன்னாள் அமைச்சர் இராஜகுமாரி அமிருதகௌரியை அமர்த்தினேன் — இவரது பெயர் எந்தக் கொந்தளிப்பையும், சூழறுபடியையும், ஐயத்தையும் அவதூறையும், அடக்கிவிடக்கூடும் என்ற நோக்கத்தோடு!

ஆனல்...? என்னோடு அவர் பெயரும் சந்திக்கு இழுக்கப்பட்டிருக்கிறது — கண்டனக் கணைகள் பலப்பல அவரைத் தாக்குகின்றன. பாபம், பரிதாபத்துக்குரியவர்.

என்னையாவது இப்போதுதான் நாடு அறியும்—எனவே எதையும் நான் எளிதில், சிரித்துக் கொண்டே, தாங்கிக்கொள்ள முடியும்.

ஆனல், இராஜகுமாரி அப்படியல்லவே! அமைச்சராக மட்டுமில்லை அவர். அகில உலக ஸ்தாபனங்களிலேயும், அவருக்கு இடமிருக்கிறது. அப்படிப்பட்டவருடைய பெயர் சந்திக்கு இழுக்கப்படுவது அவருக்கு எவ்வளவு வேதனை தரும்!

நான் யாரையும் குற்றம் சாட்ட விரும்பவில்லை. பண்டித நேரு என்னைக் காப்பாற்ற முன்வரவில்லையே என்பதற்காக நான் வருந்தவில்லை. அவருக்கும் எனக்குமிருந்த உறவை நாடு அறியாது — நாங்கள் தான் அறிவோம்.

கோபுரத்திலே தூக்கிவைப்பதும், குழியிலே தள்ளிவிடுவதும், அரசியலிலே சாதாரண நிகழ்ச்சிகள், அன்றாடச் சம்பவங்கள். நான் அரசியலிலே என்றுமே இருந்தவனல்ல—ஆனாலும் மாபெரும் அரசியல் வாதியிடம் அந்தரங்கச் செயலாளனாக இருந்து, அரசியலென்றால் என்ன, அதன் பெயரால் தினம்தினம் நடத்தப்பெறும் திருவிளையாடல்கள் எவையென்ன என்று நன்றாக அறிவேன்!

எனவே நான் யாரையும் நொந்து கொள்ளவில்லை—"காலமே நீ எத்தனை யெத்தனை திருவிளையாடல்களை நடத்துகிறாய்" என்று காலத்தைப் பார்த்துக் கேட்கிறேன்.

அந்தத் திருவிளையாடலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒரு துருப்புச் சீட்டைப் பயன்படுத்தினேன் — நானும் ஓர் காங்கிரசுக்காரன் என்று அறிவிப்பு விடுத்தேன்!

பார்ப்போம் அந்தத் துருப்புச் சீட்டு எந்த அளவு பயன் தருகிறது என்று!

முந்திரா

'நம்பத்தகாதோர்' பட்டியல் வளருகிறது, நாளொரு உருவமும் பொழுதொரு வண்ணமுமாக!

ஓராண்டுக்கு முன்னாலே அந்தப் பட்டியலிலே இடம் பெற்ற நான்—இப்போது இடம் பெற்றிருக்கிற மத்தாய் — இருவருக்குமிடையே இருக்கின்ற பேதா பேதங்கள் அநேகம்,—ஆனாலும் ஒரே பட்டியலில் இருவருக்குமே இடம்.

அன்று நான், இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் பங்குகளை, அரசாங்கத்திற்கு விற்பதற்குத் துணை நின்றோர் பற்பலர் — அதிலே சந்திக்கு இழுக்கப்பட்டோர் சிலர் -இதுவரை சந்தேகக் கண்களுக்கு ஆட்படாமலிருந்து வேறேதோ காரணத்தாலே அவதூறுக்கு ஆளாகியிருக்கிற ஒருவர் மத்தாய்!

எனக்குத் துணைநின்ற சிலர் இன்னமும் தூசு படியாமல், மாசு மருவற்றவர் எனக் கருதப்படுகின்றனர், 'அவர்களையெல்லாம் கண்டுபிடித்தாக வேண்டும்' என்று வாதிட்டவண்ணம் பலர் இருப்பதை நான அறிவேன்.

அவர்களது வாதம். சரியானதா தவறானதா,நானறிவேன். ஆனல், பாவம், அவர்களை ஏன் காட்டிக் கொடுத்து, நன்றிகெட்டவன் என்ற பட்டத்தை நான் சூட்டிக் கொள்ள வேண்டும்?

'நம்பத்தகாதோர்' பட்டியலிலே இடம்பெற்றது போதாதா, 'நன்றி கெட்டவர்' பட்டியலிலுமா நான் இடம் பெறவேண்டும்?

நானும் அன்றைய நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியும் சந்திக்க, மத்தாய் வழிவகுத்தார் என்ற பேச்சு அடிபடுவதைக் கண்டு, எனக்கே ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அதை ஒப்புக்கொள்ளவோ, மறுத்திடவோ நான் விரும்பவில்லை; எனக்கேன் அந்த வீண் வம்பு? 'எனக்கு நினைவில்லை' என்று கிருஷ்ணமாச்சாரியே தட்டிக் கழித்துவிட்டபோது, எனக்கு மட்டும் ஏன் அந்த வீண் வேலை?

ஆனல் மத்தாய்க்கு ஓரளவு நான் கடமைப்பட்டிருக்கிறேன்—அந்தக்கடமையை உணருகிறேன், நன்றிகெட்டு நடக்கவில்லை.

பத்தே ஆண்டுகளில் 36 கோடிக்கு அதிபதியாக நான் ஆகிவிட்டது கண்டு, டாடாவும் பிர்லாவும், டால்மியாவும் பஜாஜூம் ஆத்திரப்பட்டதுண்டு!

அந்த ஆத்திரத்தின் பலனாக, ஆட்சிப்பீடத்திலே இருந்த சிற்சிலரைக் கைக்குள்ளே போட்டுக் கொண்டார்கள் — பணத்தாலே குளிப்பாட்டப்பட்டோர் பற்பலர்.

அவர்களின் பொறாமையுணர்ச்சி என்னையும், அன்றைய நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியையும் சந்திக்கு இழுத்தது—சங்கடத்திற்கு ஆளானேம் நாங்கள்!

இன்று ஆட்சிப்பீடத்திலேயிருக்கிற காங்கிரசாருக்கு டாடாவும் பிர்லாவும் மட்டுமே தேர்தல் காலத்தில் பணம் கொடுத்தார்கள் என்பதல்ல — நானும்தான் கொடுத்திருக்கிறேன்.

ஆனாலும்......என்ன காரணத்தாலோ......நான் மட்டும் சந்திக்கு இழுக்கப்பட்டேன்!

உம்'......அதையெல்லாம் எண்ணிப் பலனென்ன? அன்று டி. டி. கே.க்கு செயலாளராக இருந்த எச். எம். படேல், வேலையிலிருந்து நீக்கப்பட்டதும், பிர்லா போன்றவர்களால் ஆதரிக்கப்படுகிறார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்தி வருகிறது.

அந்தப் பாவியை நம்பித்தான் தஸ்தாவேஜுகளை கிருஷ்ணமாச்சாரி ஒப்புவித்தார் — அதன் பலன்? அவர் இன்று மூலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்!

உதவி செய்த படேலுக்கு பிர்லா பணஉதவி செய்கிறார் என்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. அதே வழி நடந்திட எத்தனிக்கிறேன். மத்தாய்...இனி ...என கம்பெனி ஒன்றில்...அலுவலில்...! வேண்டாம்! கொஞ்ச நாள் ஆகட்டும்! ஆரவாரங்கள் அடங்கட்டும்—பிறகு...?

டி. டி. கே.

யாரை நம்புவது? படேலை நம்பினேன் — படுகுழியில் தள்ளப்பட்டேன்!

என்னைப்போல் நம்பியவர்கள் ஏராளம், நம்பிக்கை மோசத்திற்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் பற்பலர், ஆனால், அதனால் படுகுழியில் தள்ளப்பட்டது நான் ஒருவன்தான்!

பண்டித நேருவின் அந்தரங்கக் காரியதரிசி செய்திருக்கின்ற அக்கிரமங்கள் ஏராளம், ஒன்றிரண்டல்ல!

தாயார் பேரிலே நிதிசேர்த்தார் —தர்ம ஸ்தாபனம் நிறுவினார் — ஆனால் அந்தத் தர்மஸ்தாபனம் ஏதோ ஒரு நிறுவனத்திற்கு உதவியளித்திருக்கிறதாம், அந்த நிறுவனம் எது என்று இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஊர்பேர் தெரியாத ஒரு நிறுவனம் — அப்படிப்பட்ட ஒரு நிறுவனம் இருக்கிறதா என்பதிலேயே பலருக்கு ஐயப்பாடு—அந்த 'நிறுவனத்திற்கு' மத்தாயின் தாயார் பெயரிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஸ்தாபனம் நிதி உதவி அளித்திருக்கிறதாம். எத்தனை மர்மம் அதில்!

அந்த ஸ்தாபனத்திற்கு உதவியளித்திருக்கிற பற்பலரில் பிர்லா ஒருவர், முக்கியஸ்தர்!

பிர்லாவுக்கும் மத்தாய்க்கும் என்ன தொடர்பு, எப்படித் தொடர்பு?

பண்டித நேரு 'அஞ்ஞாதவாசம்' செய்யப் புறப்பட்டாரே குலு பள்ளத்தாக்கு என்னும் பகுதிக்கு. அந்தப் பகுதியிலே பழத்தோட்டங்கள் உண்டாம் மத்தாய்க்கு! எப்படிக் கிடைத்தன அவை?

இவ்வளவு கேள்விகளும் எழுப்பப்படுகின்றன பத்திரிகைகளிலும் பாராளுமன்றத்திலும், இன்னும் கொஞ்சம் காரசாரமாக!

அதிலே வேடிக்கை என்னவென்றால், இத்தனைக்கறைகளும், குறைபாடுகளும், நிர்வாக ஊழல்களும், கோணல்களும், பண்டித நேருவை ஒரு சிறிதும் தாக்கவில்லை— அப்பழுக்கற்றவராகவே கருதப்படுகிறார் இன்னமும்.

நேருவை நான் சந்தேகப்படுகிறேன் என்று யாரும் தவறாகக் கருதவேண்டாம். அவரிடம் நன்கு பழகியிருப்பவன் நான்--அவரைப் பற்றி முழுவதுமில்லையென்றாலும் ஓரளவாவது அறிவேன்.

ஆனால் அந்தரங்கக் காரியதரிசி செய்த ஒன்றுமே தனக்குத் தெரியாது என்று வாதிடுகிறாரே, அதிலேதான் எனக்குக் கொஞ்சம் ......! வேண்டாம், அதற்குமேல் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை!

எப்படியோ, பண்டிதர் இன்னும் இந்தப் பாரதத்தின் அப்பழுக்கற்ற மனிதராகத் திகழ்கின்றார் — அதுவரை எனக்கு ஒரு விதத்திலே மகிழ்ச்சி!

ஆனாலும் அவர் இனியேனும் மிகவும் எச்சரிக்கையோடு இருந்திட வேண்டும் என்று நான் மனதார விரும்புகிறேன். காரணம், அவரைச் சுற்றியிருக்கிற 'ஆட்கொல்லிகள்' ஏராளம். அதைத்தான் நான் அன்றும் சொன்னேன் — இன்றும் சொல்லுகிறேன்— அதுவும் அந்த ஆட்கொல்லிகளுக்குப் பலியாகிவிட்டவன் என்ற முறையில்! சுய அனுபவம் சொல்லிக்கொடுத்த பாடம், அவ்வளவுதான்!

ஆலை முதலாளிகளுக்கிடையே ஆதிக்கப் போராட்டம்— அதிலே பலியான படைவரிசையில் முதலிடம் பெறுவது என்பெயர்.

பட்டியல் நீளுகிறது என்பதைக் காட்டுகிறது, மத்தாய் இராஜிநாமா செய்யவேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தம்.

நீளுகின்ற பட்டியலில் நம் பண்டிதரும் இடம் பெறக் கூடாதென்பதே என் அவா. அந்த அவா நிறை வேறுமா?

பாம்பாட்டிக்குப் பாம்பினாலே சாவு, சர்க்கஸ்காரனுக்குச் சிங்கத்தாலோ, புலியாலோ சாவு என்பார்கள்.

பண்டிதநேரு அப்படிப்பட்டதோர் பாம்பாட்டி—சர்க்கஸ்காரர்!

அதனாலேதான் நான் அஞ்சுகிறேன்—நாடே அஞ்சுகிறது!

நமது அச்சத்தினைப் போக்கிடும், வகையில், அவனி புகழும் பண்டிதர் நடந்திட வேண்டுமென்று அவரை நான் வேண்டுகிறேன், — ஜூலியஸ் சீசருக்கு "மார்ச் 15-நினைவிலே வைத்துக்கொள்" என்று எச்சரிக்கை விடுத்த ஓர் நல்லெண்ணக்காரனைப்போல்!

விற்பனையாகிறது!

தோழர்

டி. கே. சீனிவாசனின்

கருத்துச் சித்திரம்!

"ஆடும் மாடும்"

ஆசிரியர் இதில் தன் இதயத்தையே திறந்து காட்டுகிறார்!

விலை 1—50

விற்பனையாளர்களுக்கு தகுந்த கழிவு உண்டு. தனிப்புத்தகம் பதிவு அஞ்சலில் பெற ரூ. 2—25 M. O. செய்க.

அருணா பதிப்பகம்,
127, தெற்காவணிமூல வீதி, மதுரை.

சென்னையின் விற்பனை உரிமையாளர்:

நேரு நியூஸ் மார்ட்,
லஸ் கார்னர், மைலாப்பூர் சென்னை.

காலம் கனிகிறது

சம்பத்,
டாக்டர் கிருஷ்ணசாமி,
நல்லமுத்து ராமமூர்த்தி,
மதுசூதனராவ்;
தாவுத்அலி மிர்சா,
ராமிரெட்டி,
மாதவமேனன்

—ஆகிய மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல,

ஆந்திரத்தின் முதலமைச்சராம் சஞ்சீவிரெட்டி,

அந்த மாநிலத்தின் நிதியமைச்சர் பிரம்மானந்தரெட்டி,

ஆந்திர வர்த்தக குழுவின் தலைவர் இலட்சுமி நரசு

—இவர்களெல்லாம் கடந்த ஓரிரு வாரங்களில் தென்னகத்தின் குரலை, அது வடவரால் வஞ்சிக்கப்படுகிற தென்ற உண்மையினை, தெள்ளத் தெளிய எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

வெவ்வேறு 'முகாம்'களைச் சேர்ந்தவர்கள்—அவர்கள் பேசிய இடங்களும் வெவ்வேறு—ஆனால் அவர்களாலே வெளியிடப்பட்ட கருத்துக்களிலோ, எவரும் பிரமித்திடத்தக்கதோர் ஒருமைப்பாடு!

நமது சம்பத், தனக்கேயுரிய பாணியில், வடக்கு வளர்வதையும் வஞ்சனை புரிவதனையும் வன்மையாகக் கண்டித்ததோடு மட்டுமல்ல, "எதையும் சாதித்திட என்னால் இயலவில்லை" என்று கையை விரிப்பதற்காகவா எங்களவர் ஒருவரை இந்தத் துறைக்குத் துணையமைச்சராக ஆக்கி வைத்திருக்கிறீர்கள் என்று, வேதனையை வேடிக்கையாக்கி வெளியிட்டிருக்கிறார்.

அவர் அங்ஙனம் பேசியதிலே வியப்பில்லை எவருக்கும்—வேண்டுமானால் சிலர் "பாவி, எவ்வளவு தெளிவாகப் பேசுகிறார்! உண்மைகளைக் கல்லி எடுத்தல்லவா கனல் கக்க முழங்குகிறார்!" என்று பெருமூச்சு விட்டவண்ணம், தமக்குள்ளே எண்ணிக் கொள்ளக் கூடும்.

"கண்ணே, மணியே! கற்கண்டே, நற்கனியே அமுதே, அழகே!', என்று சொன்மலர் தொடுத்து, சிந்தை குளிர்ந்து, தளிர் நடை கண்டு உள்ளக் கிளர்ச்சியெய்தி, இரு கரத்தால் வாரியணைத்து, முத்தமாரி பொழிந்து, முடி நுகர்ந்து, மழலை

M. S. **வெங்கடாசலம்,** M. A.

மொன்று உதிராதா என ஆவலுடன் எதிர்பார்த்து ஏங்கி, உதிருங்கால் உள நெகிழ்ந்து, யாழும் குழலும் ஈடோ இதற்கெனக் கேட்டு இறுமாந்து, சிறுகை துழாவிய பழங்கூழ் பருகி, அதில் பல்சுவை கண்டு பெருமகிழ்வெய்தி, ஈன்றெடுத்த தாய் இனபுறுதல் கண்டு வியப்புத் தோன்றிடாது எவருக்கும்.

அதைப்போல், சம்பத்தின் முழக்கம நமக்கு மகிழ்ச்சியூட்டுகிறது, கிடைத்த வாய்ப்பு வழக்கம்போல் நல்ல முறையிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது அவராலே என்பதால்—மாற்றார், மனக்கொதிப்பு அடைந்திடக்கூடும்—ஆனால் எவரும் வியப்படைய வில்லை!

நம்முடைய ஆதரவினைப் பெற்று, பாராளுமன்றத்திலே அமர்ந்திருப்பினும், நம்மைப் பற்றியோ, நமது வளர்ச்சிபற்றியோ, கொள்கை கோட்பாடுகள் குறித்தோ என்ன காரணத்தாலோ இதுவரை பேசாதிருந்த டாக்டர் கிருஷ்ணசாமியும் வாய் திறந்து மனவேதனையைக் கொட்டியிருக்கிறார்—தென்னகத்தைத் திருப்பிப் பாரும், என்று டில்லி மூலவருக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்—என்பதிலே கூட நாம் வியப்படையவில்லை. காரணம், அவர் நம்மோடு ஓரளவு தொடர்புகொண்டவர்—அவருக்கு நம்மைத் தெரியும், நாமும் அவரை அறிவோம்.

ஆனால் மற்றவர்கள், மாற்று முகாம்களிலே உள்ளவர்கள் மட்டுமல்ல, நமது குரல் இன்னமும் சரியான முறையிலே எட்டாத ஆந்திரத்தையும் கேரளத்தையும், கருநாடகத்தையும் சார்ந்தவர்கள், நமது கருத்தினை, அறிந்தோ அறியாமலோ வெளியிட்டிருப்பது கண்டு வியப்படைவோர் எண்ணிறந்தோர்.

"காட்டுத் தீ—தொத்து நோய்—கொல்லும் கிருமிகள்—கபோதிகள்—கற்பனை உலகத்திலே சஞ்சரிப்போர்—குறைமதியினர்—குதர்க்கவாதிகள்" என்ற இன்னோரன்ன "அடைமொழி"களை நமக்குத் தந்து, ஆறுதலைத் தேடிப் பெறுகின்ற கனதனவான்களின் உள்ளம் கொதித்திடும். பாவிகள் இப்படியா வளர்கிறார்

ன் என்று எண்ணிப் பெருமூச்சு விடுவர்.

அந்த வகையிலே தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மையினை, தெள்ளத்தெளிய, இவர்களெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்னும் சில..., இந்த அளவு தெளிவோடும் துணிவோடும் பேசிடவில்லை யெனினும், எங்கள் மாநிலத்தைக் கவனியுங்கள், இந்தப் பகுதிக்கு இரயில் பாதை தேவை, இந்தத்துறை கவனிக்கப்பட வேண்டும், என்று எடுத்துக் கூறுகின்ற கட்டம் வரையிலே வந்திருக்கிறார்கள். அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவர்களிலும் ஆந்திரத்தைச் சேர்ந்தோரும், கருநாடக, கேரள மாநிலத்தோரும் இருக்கிறார்கள். இதோ அவர்கள் பட்டியல்:-

சங்கரையா
இளையபெருமாள்
முல்கா கோவிந்த ரெட்டி
திருமதி. யசோதா ரெட்டி
திருமதி. சீதா யுத்வீர்
திருமதி. வேதகுமாரி
உஸ்மான் அலிகான்
எம். ஆர். கிருஷ்ணு

இங்ஙனம் தென்னகத்தின் குரலை, கோரிக்கைகளை, எந்த ஏகாதிபத்தியமும் கண்டு நடுங்கிடும் வகையில் எண்ணற்றோர் எழுப்பியிருந்தும், டில்லி மூலவர்கள் கேளாக்காதினராக இருக்கின்றார்கள் என்பது மட்டுமல்ல, "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பது போல், வேறோர் பேரிடியைப் பரிசாகத் தந்திருக்கிறார்கள் நமக்கு.

கருநாடக மாநிலத்தில் நிறைவேற்றப் படவிருந்த சரவதி திட்டம், நிறைவேற்றப் பட முடியாதாம். வெளிநாட்டு மூலதனம் போதுமான அளவு கிடைக்காததாலே, திட்டத்தினை ஒத்திப்போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாம்.

இந்தத் திட்டம் அனுமந்தையா முதலமைச்சராக இருந்த கால முதல் இன்றுவரை ஒத்திப் போடப்பட்ட வண்ணமிருக்கிறது.

டில்லியின் இந்தப் போக்கு, கருநாடக மாநிலத்திலே ஏற்படுத்தி இருக்கிற அதிருப்தி கொஞ்சநஞ்சமல்ல.

இரண்டு மாதங்களுக்கு முன்னால், நவம்பர் இறுதி வாரத்தில், அந்த மாநிலத்தில், டில்லியின் ஓரவஞ்சனைப் போக்குக் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாயிற்று.

முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா உட்பட, பற்பல ஆதாரங்களை எடுத்துக்காட்டி, தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது என்பதை, பற்பல உறுப்பினர்கள் விளக்கினராம். மல்லராத்யா என்பார் அவர்களிலே ஒருவர்.

வடக்கு—தெற்கு பிரிவினை—போராட்டம்

—இவைபற்றியெல்லாம் அங்கே பேசப்பட்டது என்று, நாசூக்காக மறைக்கவேண்டியதை மறைத்து, மறைக்க முடியாததைக் கோடிட்டுக் காட்டி, செய்தி வெளியிட்டிருக்கிறது 'இந்து' இதழ் 27-11-58ல்

இந்த அளவுக்கு தென்னகமெங்கணும் எழுச்சி ஏற்பட்டுவிட்டது — நாம் ஏமாற்றப்படுகிறோம் என்கிற உண்மை எங்கெங்கிருந்தோ வெளிப்படுகிறது.

இதன் முடிவு என்ன ஆகும்?

இதோ அந்தவினாவிற்கு விடை தருகின்ற வகையிலே அமைந்திருக்கின்ற ஓர் நிகழ்ச்சி.

ஆந்திர கைத்தறியாளர் சங்கத்தின் சார்பில், கைத்தறியாளரின் பிரச்சினைகளை ஆராய்வதற்காகக் கடந்த வாரத்தில் ஐதராபாத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பெற்றது. அந்தக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை, அனைவருக்கும் வழிகாட்டுகின்ற வகையில் அன்பழைப்பு ஒன்றை விடுத்திருக்கிறது, தென்னக மாநிலங்கள் நான்கினுக்கும்.

இதோ அந்த அறிக்கை:—

"கைத்தறிதான், ஆந்திர, கேரள, கருநாடக, தமிழக மாநிலங்களில், விவசாயத்திற்கு அடுத்தபடியான பெருந்தொழில். எனவே அதற்குப் போதுமான பாதுகாப்பும், இன்றையத் தொல்லைகளிலிருந்து விடுபட நிவாரணமும் தேடுவதற்காக, இந்த நான்கு மாநிலங்களும் ஒன்றுபட்டு மத்திய சர்க்காரிடம் போராட வேண்டும்."

போராட வேண்டுமென்று சொல்லுகிற அளவுக்கு வந்திருக்கிற எழுச்சி, போராட்டம் நடத்தியும் பலன் கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டால் என்ன ஆகும்?

போராட்டத்தின் மூலம் நீதியைப் பெறமுடியும் என்கிற நம்பிக்கை போய்விட்டால், அடுத்து நம் கரத்திலே இருக்கிற ஆயுதமென்ன, நாட்டுப் பிரிவினையைத் தவிர?

இவ்வளவையும் எண்ணிப் பார்க்கும்போது நமக்கு வெற்றிப் புன்னகை தோன்றுகிறது--காலம் கனிகிறது என்று நாம் உணருகின்ற காரணத்தால்!!

★

மனிதன் தன்னைத் தாக்க வரும் மற்றவர்களிடமிருந்து தற்காப்புத் தேடிக்கொள்வதற்காகக் கல்லாலும் இரும்பு முதலியவற்றாலும் கொலைக் கருவிகள் செய்தான். தன் உடைமையான பொருள்களைக் கவர்ந்து செல்ல விரும்பும் சோம்பேறிகளிடமிருந்து அவற்றைக் காப்பாற்றுவதற்காகக் கதவு தாழ்ப்பாள் முதலியவற்றை அமைத்தான். கற்கருவிகளும் இரும்புக் கருவிகளும் வில், அம்பு, வேல் என வளர்ந்தன; துப்பாக்கி பீரங்கி என முன்னேறின. நீர்க்குண்டு என்பவை வந்துள்ளன. இவை வந்த பிறகும் மற்றவர்களிடமிருந்து காத்துக்கொள்ளும் திட்டம் இன்னும் நிறைவேறவில்லை.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
[illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.